வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 03 05.11.2022 சனிக்கிழமை இதழ் : 332 பக்கங்கள் : 16

# சீனாவுடன் சுதந்திர வர்த்தகம் இலங்கை விரைவில் ஒப்பந்தம்



## ஜனாதிபதி ரணில் சாதக சமிக்ஞை

கொழும்பு, நவம்பர் 05

சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் ஈடுபடுவதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உலகின் முதல் மற்றும் மிகப் பெரியதான சீனாவின் சர்வதேச இறக்குமதி கண்காட்சி நேற்று ஆரம்பமானது. இதில், சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங்கும் பங்கேற்றிருந்தார்.

சீன ஜனாதிபதி தனது உரையில், சீனா தனது பரந்த சந்தையில் வாய்ப்புகளை பகிர்ந்து கொள்ள அனைத்து நாடுகளுடனும் கட்சிகளுடனும் இணைந்து செயல்படும். ஒரு வலுவான உள்நாட்டு சந்தையை வளர்ப்பதற்கும் பொருட்களின் வர்த்தகத்தை மேம்படுத்தவும் வர்த்தகத்துக்கான புதிய வழிமுறைகளை உருவாக்கவும் தேரமான தயாரிப்புகளை இறக்குமதி செய்வதற்கும் நாம் முயற்சிகளை முடுக்கி விடுவோம். இதற்காக பெல்ட் அன்ட் றோட் திட்டம் ஒத்துழைப்புடன் புதிய வியாபார மண்டலங்களை சேவைகளை நிறுவும் திட்டங்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறியிருந்தார்.

இந்த நிகழ்வில், மெய்நிகர் வழியில் பங்கேற்ற 15

### கோவை கார் குண்டுவெடிப்பு:
## முபீன் ஐ. எஸ். அமைப்பை சேர்ந்தவர் என்பது உறுதி! 4



## நீரிழிவு நோய் தாக்கம் வடக்கில் அதிகரிப்பு!

### இளையோர் அதிகளவில் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 05

வடக்கு மாகாணத்தில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் 15 வீத மாணவர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். போதனா மருத்துவமனை எச்சரித்துள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் இதுவரை 3000இற்கும் மேற்பட்ட நீரிழிவு நோயாளர்கள் புதிதாக சிகிச்சை 15

## இரட்டை குடியுரிமை எம். பிக்கள்மீது நடவடிக்கைக்கு அதிகாரம் இல்லை!

### சபாநாயகர் மகிந்த யாப்பா

கொழும்பு, நவ. 05

இரட்டை குடியுரிமை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது இருப்பார்களேயானால் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. நீதிமன்றம் ஊடாக தீர்வு ஒன்றை பெற்றால் மட்டுமே நடவடிக்கை சாத்தியம் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இரட்டை குடியுரிமை வைத்துள்ள பாராளு 15

## விமல் - டலஸ் இணைவு அரசுக்கு எதிராக போராட

கொழும்பு, நவ. 05

அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபடுவது குறித்து விமல் வீரவன்ஸவின் மேலவை இலங்கை கூட்டணி, டலஸ் அழகப்பெருமவின் சுதந்திர மக்கள் காங்கிரஸ் ஆகியன பேச்சு நடத்தியுள்ளன.

இந்தப் பேச்சு சுதந்திர மக்கள் காங்கிரஸின் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில், பொருளாதார நெருக்கடியை மென்மேலும் நெருக்கடிக்குள் 15

### போதைப்பொருளை கட்டுப்படுத்த
## மோப்ப நாயின் துணையுடன் களமிறங்கினர் பொலிஸார்!



வவுனியா, நவ. 05

போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வவுனியா பொலிஸார் மோப்ப நாயின் துணையுடன் விசேட சோதனை நடவடிக்கையை நேற்று ஆரம்பித் 15

## நிறுத்தப்பட்டது தேநீர் விருந்து!

கொழும்பு, நவ. 05

வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள், தூதுவர்கள் உள்ளிட்ட அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கான பாரம்பரிய தேநீர் விருந்தை இம்முறை நடத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டே ஜனா 15

## குரங்கு அம்மை நோய் தொற்றிய முதல் இலங்கையர் அடையாளம்!

கொழும்பு, நவ. 05

இலங்கையில் குரங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட முதலாவது நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இவர் கடந்த முதலாம் திகதி டுபாயில் இருந்து நாடு திரும்பிய 20 வயதுடைய இலங்கையர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விரிவாக்கப்பட்ட நிணநீர் கணுக்கள் மற்றும் சோர்வு உள்ளிட்ட பிற அறிகுறிகளின் காரணமாக அந்த நபர் கொழும்பு ஆதார வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகச் சென்றுள்ளார்.

இதனையடுத்து, அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்போதே, அவர் குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டிருப் 15

## இலங்கைக்காக உலக மக்களிடம் ஐக்கிய நாடுகள் சபை நிதிசேகரிப்பு

உதவி வழங்குமாறும் கோரிக்கை 14

## மக்களிடம் அரசியல் அறிவு குறைவு: தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் கவலை!

கொழும்பு, நவ. 05

அரசியல் அறிவற்ற வாக்காளர்கள் திலினி பிரியமாலியைகூடத் தெரிவு செய்வார்கள் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் மிகவும் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

டலஸ் அழகப்பெரும ஓர் ஊடகவியலாளராக இருந்து அரசியலுக்கு வந்தவர். கடும் சிங்கள இனவாதத்தை வெளிப்படுத்துவதில் தீவிர பங்காற்றிவரும் ஒரு பத்திரிகை குழுமத்திலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். அந்தப் பத்திரிகை இனவாத கருத்துக்களை வெளியிட்டபோது அவரின் கட்டுப்பாட்டுக்குள் பத்திரிகை இருக்கவில்லையா என்பது தெரியவில்லை.

சில தினங்களுக்கு முன்னர், அவர் தெரிவித்திருந்த கருத்து ஒன்று இந்த ஊர்க்குருவியின் கவனத்தை பெற்றிருந்தது.

தன் வாழ்நாளிலேயே தனக்கு கிடைத்த ஒரு பாராட்டை தன்னால் மறக்கமுடியாது என்று தெரிவித்திருந்தார்.

பாராளுமன்றில் நடைபெற்ற ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தலின்போது, தேர்தலுக்கு முதல்நாள் இரவு தானும் பேராசிரியர் பீரிஸ், சஜித் பிரேமதாஸ, டிலான் பெரேரா ஆகியோர் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைச் சந்தித்தனர் என்றும் கூட்டமைப்பு அப்போது தனக்கு ஆதரவளிக்க முடிவெடுத்ததாகவும் தெரிவித்திருந்த டலஸ், சம்பந்தன் எதற்காக தனக்கு ஆதரவளிக்க முடிவெடுத்தார் என்பதை சொன்னதாகவும் அவர் சொன்ன அந்த வார்த்தைகள் தன் வாழ்நாளில் தனக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

சம்பந்தன் சொன்னது இதுதான்: 'நாங்கள் டலஸூக்கு ஆதரவளிக்க முடிவெடுத்தது, அவர் இனவாதி அல்ல. அவர் ஊழல்வாதியும் அல்ல.'

இதனால்தான் அவரை ஆதரிக்க முடிவெடுத்தார் சம்பந்தன் என்கிறார் டலஸ்.

கூட்டமைப்பு யாரை ஆதரிப்பது என்பதை முடிவு செய்வதற்காக நடந்த கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில், டலஸை ஆதரிக்குமாறு ஒரு தூதரக அதிகாரி கேட்டுக்கொண்டார் என்பதும்,

'நாங்கள் விடுத்த கோரிக்கைகளை எதுவித கேள்வியும் கேட்காமல் எழுத்தில் உறுதியளித்தார். அதனால்தான் அவரை ஆதரிக்க முடிவெடுத்தோம்' என்று சிறீதரன் சொன்னதும் தமிழ் மக்களை வழக்கம்போல முட்டாளாக்குவதற்காகவா என்று இந்த நேரத்திலாவது கேட்காமல் இருக்கமுடியவில்லை.

சம்பந்தன் ஐயா அவரை ஆதரிக்க ஏன் முடிவெடுத்தார் என்பது அவருக்கு மாத்திரமே தெரிந்தது என்றாலும் டலஸ் இன்று பெருமைகொள்வதுபோல சம்பந்தன் கூறியிருந்தால், அவர் இனவாதியும் அல்ல, ஊழல்வாதியும் அல்ல என்றாலும் இந்த இரண்டிலும் புரையோடிப்போன ஒரு தரப்புடன்தான் கடைசிவரை அவர் அரசியல் செய்தார். மக்கள் எழுச்சி கொண்டு கோட்டாபய தலைமையிலான அரசாங்கத்தை விரட்டியடிக்கும் வரை அவர் அந்த முகாமில்தானே இருந்தார்.

கொள்ளையோ, கொலையோ செய்வது மாத்திரம் குற்றமல்ல. அதற்கு உடந்தையாக இருப்பதும்தான் குற்றம் என்று சொல்வர்கள். அப்படி இனவாதம், ஊழல் என்று இரண்டுக்கும் உதாரணமாக இருக்கின்ற ஒரு தரப்புடன் அரசியலுக்கு வந்தவர் டலஸ். கடைசிவரை (மக்கள் எதிர்க்கும்வரை) அவர்களுடனேயே இருந்தவர்.

அவருக்கு சம்பந்தன் ஐயா வழங்கிய இந்த நற்சான்று பத்திரம் நிச்சயம் சம்பந்தனின் அரசியல் தூய்மையின் மீதே சந்தேகத்தை ஏற்படுத்தவல்லது.

இப்போது கடைசியாக சம்பந்தனின் நற்சான்று பெற்ற டலஸ், கோட்டாபயவுக்கு நற்சான்று வழங்கியிருக்கிறார்.

'கோட்டாபய ஒரு சிறந்த மனிதர். அதனை நான் இப்போதும் கூறுகிறேன்.' என்று கூறியிருக்கும் டலஸ், கோட்டாபயவின் குடும்ப உறவினர்கள் அநாவசியமான முறையில் அதிகாரத்தை கையில் எடுத்தார்கள். அதனை அவர் அனுமதித்ததால்தான் அவர் தோல்வி கண்டார் என்கிறார்.

அவர் கோட்டாபய குறித்து தெரிவித்தவை சரியானவையாகவே இருக்கலாம். அதுவல்ல, நாம் குறிப்பிடவருவது, அதற்கு உதாரணமாக அவர் சொன்ன விடயம்தான் கவனத்திற்குரியது.

தான் மின்சக்தி அமைச்சராக இருந்தபோது, இயற்கை எரிவாயு மின்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக கேள்வி மனுக்கள் கோரப்பட்டு அதற்கான இறுதிக்கட்ட பணிகள் நடந்து கொண்டிருந்தபோது, அந்தத் திட்டத்தை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது என்றும், துறை சார்ந்த அமைச்சரான தனக்கே தெரியாமல் அப்படி அமைச்சரவைக்கு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டபோதுதான் கோட்டாபயவின் நிலைமை தனக்கு புரிந்தது என்றும் அப்போதே அரசாங்கத்தை விட்டு விலகவேண்டும் என்று தீர்மானித்தேன் என்கிறார்.

மனுசன் சம்பந்தன் சொல்வதுபோல ஊழலற்ற இனவாதம் இல்லாத மனுசன் என்பதால்தான், இரண்டாயிரத்து இருபத்தி ஓராம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த இந்த சம்பவத்துக்குப் பிறகு, மக்கள் அவரின் அரசை விரட்டும்வரை அமைச்சராக இருந்து அந்த அரசுக்கு முண்டுகொடுத்துக் கொண்டிருந்திருக்கிறார்.

சம்பந்தன் ஐயா யாரை பாராட்டுகின்றாரோ அவர்கள் எல்லோருமே இப்படித்தானோ?

- ஊர்க்குருவி




# '100 நாள் போராட்டம்;' நேற்று வவுனியாவில்!

வவுனியா, நவ. 05

வடக்கு- கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 96ஆவது நாள் கவன வீர்ப்பு போராட்டம் நேற்று நெடுங்கேணியில் நடைபெற்றது.

இந்த 100 நாள் செயல் முனைவின் 96ஆம் நாள் போராட்டத்தில் பெருமளவானோர் பங்கேற்றனர்.

'வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்' ' நாங்கள் நாட்டை துண்டாடவோ தனியரசு கேட்கவில்லை.

இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம் "வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும். '13ஆவது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்' எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மத தளங்களின் புனிதத்தை கொச்சைப்படுத்தாதே, இந்து மத ஆலய இடங்களை திட்டமிட்டு சுவீகரிக்காதே என்ற கோரிக்கைகளை முன் வைத்தனர். (ஐ)

## ஆசிரியர்களின் ஆடை எந்த மாற்றமும் இல்லை!

கொழும்பு, நவ. 05

ஆசிரியர்களுக்கான ஆடைகளில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

எந்த ஒரு காரணத்திற்காகவும் ஆசிரியர்களின் ஆடைகளில் மாற்றம் மேற்கொள்ளப்படாது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

ஆசிரியர்களின் ஆடைகளில் மாற்றங்களைக் கொண்டுவருவது தொடர்பில் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## லஞ்சம், ஊழல் தொடர்பில் பொதுமக்கள் முறையிடலாம்!

### 1905 அவசர தொலைபேசி இலக்கம்

கொழும்பு, நவ. 05

அரசு ஊழியர்கள் செய்யும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் பொது மக்கள் முறைப்பாடுகளை பதிவு செய்ய அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1905 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இந்த முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நேற்று அறிவித்தது.

மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் சேவையாற்றுவோரின் இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை இந்த இலக்கத்துக்கு அனுப்பி வைக்க முடியும்.

மேலும், பதிவாளர் திணைக்களம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தில் பணியாற்றுபவர்கள் செய்யும் இத்தகைய செயல்கள் குறித்த முறைப்பாடுகளையும் அதே எண்ணுக்கு அனுப்பலாம்.

மேலும், அரச நிறுவனங்களில் பொதுப் பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்படும் இலஞ்சம் அல்லது ஊழல் நடவடிக்கைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்படும் இலஞ்சம் அல்லது ஊழல் நடவடிக்கைகளை 1954 என்ற இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும். (ஐ)

## வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்!

முல்லைத்தீவு, நவ. 05



முல்லைத்தீவு மாவட்டத்தின் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தினுடைய சிரமதான பணிகள் நேற்று பணிக் குழுவினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தின் வன்னிவிளாங்குளம் பகுதியில் அமைந்திருக்கின்ற மாவீரர் துயிலும் இல்லவளாக சிரமதான பணி துயிலும் இல்ல பணி குழுவினரின் ஏற்பாட்டில் நேற்று காலை 9.30 மணி அளவில் மாவீரர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி அக வணக்கம் செலுத்தி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த சிரமதான பணியில் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தங்களுடைய குழந்தைகளின் உடலங்களை விதைத்த பெற்றோர் உறவுகள் சமூக செயற்பாட்டாளர்கள் அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிரமதான பணிகளை முன்னெடுத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

" ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நடவேண்டும்."

- *அலெக்ஸாண்டர் சிமித் (ஸ்கொட்லாந்து கவிஞர்)*

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
05.11.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி?

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணை அடுத்த ஆண்டு நிறைவு பெறுமென்று தெரிவித்திருக்கின்றார். யுத்தம் முடிவுற்று பதின்மூன்று வருடங்களாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்னைக்கான தீர்வை இதுவரையில் காணமுடியவில்லை. ‘நல்லாட்சி’ என்று அழைக்கப்பட்ட ரணில் – மைத்திரி ஆட்சிக்காலத்தில் பலவாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக சாலிய பீரிஸ் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்தை கைப்பற்றியதைத் தொடர்ந்து அனைத்தும் கிடப்புக்கு சென்றது. ஆனால், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மட்டும் பெயரளவில் இயங்கியது.

இவ்வாறானதொரு சூழலில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விடயத்தை தாம் விரைவில் கையாளவுள்ளதாக ரணில் அரசாங்கம் கூறுகின்றது. ரணில் – மைத்திரி ஆட்சிக் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிரோடு இருப்பதற்கான வாய்ப்பில்லையென்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அவரின் இந்தக் கருத்து அப்போது விமர்சிக்கப்பட்டது. ஆனால், விசாரணைகள் முடிவுற்றால் அவ்வாறானதொரு முடிவைத்தான் பாதிக்கப்பட்ட மக்கள் காண நேரிடும். ஏனெனில், யுத்தம் முடிவுற்று பதின்மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் திரும்பி வருவதற்கான வாய்ப்பு இருக்குமா?

இப்போது கேள்வி, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்னைக்கு என்ன தீர்வு? பாதிக்கப்பட்ட மக்களை பொறுத்தவரையில் நீதியை கோருகின்றனர். நீதியை வழங்க வேண்டுமாயின் இறுதி யுத்தம் தொடர்பான பக்கச்சார்பற்ற விசாரணையொன்று இடம்பெற வேண்டும். சாட்சிகள் இருந்தபோதிலும்கூட, குமாரபுரம் படுகொலையில் குற்றம்சாட்டப்படவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். காணாமல் ஆக்கப்பட்டர்களின் உறவினர்கள் சர்வதேச விசாரணையை கோரிவருகின்றனர். ஆனால், அதன் நடைமுறைச் சாத்தியமும் கேள்வியுடன் நோக்கப்பட வேண்டியது. ஏனெனில், கடந்த பதின்மூன்று வருடகால சர்வதேச அழுத்தங்கள் எதிர்பார்த்த பெறுபேறுகளை தரவில்லை. இந்த பின்னணியில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் சில புலம்பெயர் அமைப்புக்களும் இலங்கை விவகாரத்தை மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியில் எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றனர். இலங்கை அரசாங்கமும் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகளுக்கு முற்றுப்புள்ளியிட வேண்டுமென்றுதான் எண்ணுகின்றது. ஆனால், மேற்குலக நாடுகளின் அழுத்தங்களால் அது முடியவில்லை. மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியில் எடுக்க வேண்டுமென்று கூறுபவர்களிடம் அதனை எவ்வாறு

வெளியில் எடுக்கலாம், அதன் பின்னர் இந்த விடயத்தை அடுத்த கட்டத்துக்கு எவ்வாறு கொண்டு செல்லலாம் – இந்தக் கேள்விகளுக்கு எவரிடமும் பதிலில்லை. ஏனெனில், ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்கள் உறுப்பு நாடுகளின் முடிவில் தங்கியிருக்கின்றது. நீதிக்கான குரல்கள் அங்கிருந்தாலும்கூட நாடுகளின் நலன்களால்தான் அனைத்தும் நிறுத்துப் பார்க்கப்படும். இதன் காரணமாகத்தான், கடந்த பதின்மூன்று வருடங்களாக எதிர்பார்த்த பெறுபேறுகளை பாதிக்கப்பட்ட மக்களால் காணமுடியவில்லை. இது இன்னும் அப்படியே தெடர்ந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

இது ஒருபுறம் என்றால் – மறுபுறம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பல அமைப்புகள் குரல் கொடுக்கின்றன. ஆனால், எவரிடமும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு எண்ணிக்கையை வெளியிடுகின்றனர். இது மறுபுறமாக அரசாங்கத்துக்கே சாதகமானது. ரணில் – மைத்திரி ஆட்சிக் காலத்தில், தமிழ்த் தேசிய தரப்புக்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சுயாதீன அலுவலகம் ஒன்றை நிறுவியிருக்க வேண்டும். அதன் மூலம் அனைத்து தகவல்களையும் திரட்டியிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறான எந்தவொரு விடயத்தையும் கூட்டமைப்பும் சரி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் சரி எந்தவோர் ஆக்கபூர்வமான நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை. அரசாங்கம் கூறுவதற்கு மறுப்பு அறிக்கை வெளியிடும் வேலையை மட்டுமே முன்னெடுத்து வந்திருக்கின்றனர்.

# பொன்னியின் செல்வன்: அமரர் கல்கியின் எழுத்தாற்றலை மணிரத்தினத்தின் கைவண்ணத்தில் காணமுடியவில்லை

**அனந்த பாலகிட்ணர்**



*அமரர் கல்கி - ரா. கிருஷ்ணமூர்த்தி ஐந்து பாகங்களாக எழுதிய சோழ சாம்ராச்சியத்தின் மகத்துவத்தை எடுத்துக்கூறும் பொன்னியின் செல்வன் சரித்திர நாவலின் முதலாம் பாகம் தற்போது திரைப்படமாக வெளிவந்து பிரபலமடைந்துள்ளது.*

*சோழ சாம்ராச்சியத்தின் மகிமையை கூறும் இரண்டாவது திரைப்படமாக பொன்னியின் செல்வன் வெளியாகியுள்ளது. எழுபதுகளின் நடுப்பகுதியில் ராஜராஜ சோழன் திரைப்படம் வெற்றிகரமான முறையில் வெளியாகியிருந்தது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ராஜராஜ சோழனாக நடித்திருந்தார். அந்தத் திரைப்படத்தை பெரும் பொருட் செலவில் தயாரித்தவரான உமாபதி, ராஜராஜ சோழனின் பெருமையை சிவாஜி கணேசனை அந்த மாமன்னராகவே வாழ வைத்து எடுத்துரைக்க வேண்டுமென்பதே தமது விருப்பமெனவும் குறிப்பிட்டிருந்தார்.*

*வரவாற்றுச் சிறப்புமிக்க அரச கதைகளில் முக்கிய பாகமேற்று நடிப்பதில் சிவாஜி கணேசன் தனித்துவமான ஆளுமையைக் கொண்டிருந்தார். கம்பீரமான அரச பாத்திரங்களில் சிவாஜிக்கு நிகர் சிவாஜியாகவே இருந்தார்.*

*எழுபதுகளின் நடுப்பகுதியில் வெளியான ராஜராஜ சோழன் திரைப்படம் கட்டடக்கலையின் மாபெரும் அதிசயமென்று போற்றப்படும் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயத்தை மையப்படுத்தியதாகவே வெளியாகியிருந்தது. அந்தப் பேராலயம் நிர்மாணிக்கப்பட்டு குடமுழுக்கு நிகழ்வதனையும் தேவாரப் பதிகங்களை ராஜராஜ சோழன் கண்டறிந்து நம்பியாண்டார் நம்பி மூலமாக அவற்றை பாதிப்பின்றி மீளுருவாக்கம் செய்தமை மற்றும் அவனின் ஆளுமை என்பவற்றை வெளிப்படுத்துவதாக அத்திரைப்படம் அமைந்திருந்தது.*

*சோழப் பேரரசின் விரிவாக்கம் எத்தகையதென்பதை இன்றுங்கூட இலங்கையின் பொலநறுவையில் அமைந்துள்ள இராஜேந்திர சோழன் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிவாலயமும் அதனை அண்டியுள்ள கட்டட எச்சங்களும் எடுத்தியம்புகின்றன.*

*இதுதவிர, இந்தோனேசியா வரை சோழ சாமராச்சியம் விரிவடைந்திருந்ததுடன் இராஜேந்திர சோழர் ஒரு பலமான கடற்படையையும் கொண்டிருந்தார் என்பதை வரலாற்றுச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன.*

*எனவே, சோழர் சாம்ராச்சியம் குறித்து அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி எழுதிய பொன்னியின் செல்வன் சரித்திர நாவலை மையமாக கொண்டு இயக்குநர் மணிரத்தினத்தால் தயாரான பொன்னியின் செல்வன் திரைப்படத்தை பற்றி விமரசிப்பதானால் அந்தத் திரைப்படம் ஹொலிவூட் திரைப்படங்களுக்கு நிகரான தொழில்நுட்ப வளர்ச்சியை தமிழ் திரையுலகம் எட்டியுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றதே தவிர, கதையம்சமோ அல்லது நடிகர் திலகத்தின் ஆளுமையையொத்த நடிப்பாற்றலோ சிறிதளவேனும் பொன்னியின் செல்வன் திரைப்படத்தில் காணப்படவில்லை என்றே குறிப்பிடலாம்.*

*கல்கி கிருஷ்ணமூர்த்தியின் எழுத்தாற்றலில் பொன்னியின் செல்வன் கொண்டிருந்த விறுவிறுப்பைக்கூட மணிரத்தினத்தின் கைவண்ணத்தில் காணமுடியவில்லை.*

*பொதுவாக சோழர்கள் கட்டட நிர்மாணத்தில் பெரும்புகழ் பெற்றவர்களாக இருந்தார்கள். அத்தகைய புகழ்மிக்க கட்டடக்கலை அம்சங்கள் திரைப்படத்தில் திருப்தி தரவில்லை.*

*இந்நிலையில், தமிழகத்தில் கங்கை கொண்டவர்களாக புகழீட்டியிருந்த சோழப் பேரரசர்களின் வரலாற்று முக்கியத்துவங்களை ஒரு சாதாரண விவரணச் சித்திரத்தினுள் அரை குறையாக முடக்கிவிட்டது போன்ற உணர்வே பொன்னியின் செல்வன் திரைப் படத்தை பார்த்தபோது ஏற்படுவதாக இருக்கின்றது.*

*சோழ சாம்ராச்சியம் மிகப்பழமையானது. அத்துடன், உலகில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் நிலவியதே சோழப் பேரரசு.*

*உலகில் கடற்படை யுத்தங்களை முன்னெடுப்பதில் முன்னோடிகளாக இருந்தவர்கள் சோழர்கள். பின்னாளில் இராஜராஜனால் அமைக்கப்பட்ட தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயில் அவர்களின் கட்டடக்கலை சிறப்புக்கு சான்று பகருகின்றது.*

*சோழர் காலத்திலேயே சிவனின் ஆடல் வடிவமான நடராஜர் சிலை முழு வடிவம் பெற்றிருந்தது. உலகப்பிரசித்தி பெற்ற காஞ்சிபுரம் பட்டுச்சேலை அழகுற தயாரானதுகூட முதன் முதலாக ராஜராஜ சோழன் காலத்திலாகும். இதற்கென வட இந்தியாவின் சௌராஷ்டிராவிலிருந்து உயர் ரக சேலை தயாரிப்போரை ராஜராஜ சோழன் காஞ்சிபுரத்தில் கொண்டுவந்து*

*இலங்கையில் சோழர் ஆட்சியில் நிலவிய மத நல்லிணக்கத்தைக் காண்பிக்க சில தென்னிலங்கை பௌத்த பிக்குமாரை காண்பித்தது அரைவேக்காடான காட்சி அமைப்பாகவே இருந்தது.*

*சோழப் பேரரசு கி. மு. 9ஆம் நூற்றாண்டு முதல் கி. மு. 13ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவில் நிலவியிருந்தது. தற்போதைய 2022 ஆம் ஆண்டு பேரரசர் ராஜராஜ சோழனின் 1037ஆவது சதய நட்சத்திர ஆண்டு என்பது குறிப்பிடத்தக்கது.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

தொழிலில் லாபம் காண்பீர்கள். வியாபாரத்தில் இருந்து வந்த தடை விலகும். எதிர்பாராத வரவு மகிழ்ச்சியை உண்டாகும். எதிர்பார்த்த பணம் இன்று கைக்கு வரும். இழுபறியாய் இருந்த வேலை முடிவுறும்.

**இடபம்**

புதிய பொறுப்புகள் உங்களைத் தேடி வரும். பணி புரியும் இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். எடுத்த செயலில் வெற்றி உண்டாகும். நீங்கள் எதிர்பார்த்த தகவல் இன்று உங்களுக்கு வந்து சேரும் நாள்.

**மிதுனம்**

கவனமுடன் செயல்படுங்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும்.எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். செயல்களில் அவசரம் வேண்டாம்.தொழில் புரியும் இடத்தில் நிதானம் தேவை. பண விஷயத்தில் கவனம் அவசியம்.

**கடகம்**

அமைதி காப்பது நல்லது.வம்பும் பிரச்னைகளும் இன்று உங்களைத் தேடிவரும். பொறுமை மிகவும் அவசியம்.உங்கள் மனம் ஒரு நிலையில் இருக்காது. மவுனத்தை கடைப்பிடிப்பது நல்லது.

**சிம்மம்**

குடும்பத்தில் நிம்மதி காண்பீர்கள்.பிரச்னைகளை சமாளிப்பீர்கள். உறவினர் ஒருவரின் ஆதரவால் எண்ணம் நிறைவேறும். சொத்து வாங்கும் முயற்சியில் முன்னேற்றம் காணப்படும்.

**கன்னி**

நினைத்ததை சாதிப்பீர்கள்.சோர்வு விலகி உற்சாகமாக செயல்படுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் மறைந்து போகும். உங்களுக்கு பெரியோரின் ஆசி கிடைக்கும். அதிரடியாக செயல்பட்டு முன்னேறுவீர்கள்.

**துலாம்**

நிதானம் தேவை. எதிர்பார்த்தவற்றில் ஏமாற்றம் உண்டாகும். குடும்பத்தில் ஒருவரின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.உங்கள் முயற்சிகளில் தடையை காண்பீர்கள். நேற்றைய வேலை இன்று முடியும்.

**விருட்சிகம்**

கவனத்துடன் செயல்பட வேண்டிய நாள்.உங்கள் செயல்பாட்டினால் மற்றவர்களுக்கு பதில் சொல்லும் நிலை உருவாகும். வேலை பளு அதிகரிக்கும். எதிர்பார்த்தவற்றில் அனுகூலம் ஏற்பட தாமதமாகும்.

**தனுசு**

வரவேண்டிய பணம் இன்று உங்கள் கைக்கு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.நினைத்ததை சாதிக்கும் நாள். உங்கள் திறமை பொது இடத்தில் வெளிப்படும்.பணப்பழக்கம் அதிகரிக்கும்.

**மகரம்**

பண விஷயத்தில் கவனம் தேவை. தொழில் விருத்திக்கு ஏற்பாடு செய்வீர்கள். வார்த்தைகளில் நிதானம் தேவை. உறவினர் ஒருவரால் சங்கடம் உண்டாகும். யோசித்து செயல்பட வேண்டியநாள்.

**கும்பம்**

மனதில் குழப்பம் உண்டாகும். திட்டமிட்டு செயல்படுவதிலும் தாமதம் ஏற்படும்.குழப்பங்களைத் தவிர்ப்பதால் முயற்சியில் முன்னேற்றம் காணும் நாள். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்**

அலைச்சலும் செலவும் அதிகரிக்கும் நாள். எதிர்பாராத பிரச்னைகளால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். குடும்பத்தில் ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

## கோவை கார் குண்டுவெடிப்பு:

# முபின் ஐ. எஸ் அமைப்பை சேர்ந்தவர் என்பது உறுதி!

கோயம்புத்தூர், நவ. 05

கோவையில் கார் குண்டு வெடிப்பு தாக்குதலை நடத்தியவர் ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாத அமைப்பின் பின்னணியை கொண்டவர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

கோவையில் கடந்த 23ஆம் திகதி எரிவாயு சிலிண்டர்கள் ஏற்றப்பட்ட கார் வெடித்தது. இது பயங்கரவாத தாக்குதல் பின்னணி கொண்டது என்ற அடிப்படையில் விசாரணைகள் நடைபெற்றன.

கார் குண்டுவெடிப்பில் உயிரிழந்த முபின் இயந்திர பொறியியல் படித்தவர் என்றும், விசாரணையில் தெரிய வந்துள்ளது. கார் குண்டு வெடிப்பு தாக்குதல் நடக்க ஒரு மாதம் முன்னர் முபின் தனது மனைவி பிள்ளைகளுடன் வேறு வீட்டுக்கு மாறினார். அது குண்டுவெடிப்பு நடந்த ஈஸ்வரன் கோயில் அண்மையாக உள்ளது.

வீடு மாறும்போது சில பெட்டிகளை முபின் எடுத்து வந்துள்ளார். அவரின் மனைவி கேட்டதற்கு அதற்குள் துணிகள் இருப்பதாகக் கூறியுள்ளார். கார் குண்டுவெடிப்பு நடந்த பிறகே அதற்குள் வெடி மருந்துகள் இருந்ததாக முபினின் மனைவிக்கு தெரிய வந்ததாகக் கூறப்படுகின்றது.

மேலும் கார் குண்டு வெடிப்புக்கு முதல்நாள் உடல்முழுவதும் முடிகளை மழித்து அகற்றியுள்ளார். பொதுவாக ஐ. எஸ் தற்கொலை படையினர் தாக்குதலுக்கு முன்னர் தங்கள் உடலிலுள்ள முடிகளை அகற்றுவது வழக்கம்.

அத்துடன், அவர் அரபு, தமிழில் எழுதப்பட்ட வாசகங்களில், "அல்லாவின் இல்லத்தின் மீது கைவைத்தால் வேரறுப்போம்" என்று எழுதியிருந்தார். மேலும், "ஜிகாத்தின் கடமைக்கான அழைப்பு" என்றும் "புனிதப் போரை நடத்துவது இளைஞர்கள், சிறுவர்கள் மற்றும் முதியவர்களின் கடமை" எனவும் எழுதி இருந்தார். இந்த வாசகங்கள் ஜமேஷா முபின் தனது கைப்பட எழுதியுள்ளார் என்று தெரிகிறது.

எனவே முபின் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தை சேர்ந்தவர் என்பது உறுதியாகி உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அ. தி. மு. கவின் தலைமைக்கு கோடீஸ்வரர்களே வரமுடியும்!

சென்னை, நவ. 05

அ. தி. மு. க. கட்சியின் விதி மாற்றங்களால் கோடீஸ் வரர்கள் மட்டுமே தலைமைப் பதவிக்கு வர முடியும். இதனை, தொண்டர்கள் ஏற்கமாட்டார்கள் என்று ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

தனது ஆதரவாளர்களை சந்தித்த பன்னீர் செல்வம் கருத்து வெளியிடுகையில்,

அ. தி. மு. கவில் சாமா னிய தொண்டனும் கட்சி தலைமை பதவிக்கு வர வேண் டும் என்ற வகையில்தான் எம். ஜி. ஆர்., ஜெயலலிதா ஆகியோர் சட்ட விதிகளை உருவாக்கினர். ஆனால், தற் போதுள்ள நிர்வாகிகள் இதனை தங்கள் சுய நலத்துக் காக திருத்தி மாற்றியுள்ளனர். இதனை அ. தி. மு. க. நிர் வாகிகள் நன்கு புரிந்து வருகிறார்கள். புதிய சட்ட விதிகளை உருவாக்கியதால் கோடீஸ்வரர்கள் மட்டுமே தலைமைப் பதவிக்கு வர முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை அ. தி. மு. க. தொண்டர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அ.



தி. மு. க. என்பது ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்காக உருவாக்கப் பட்ட கட்சி. இந்தக் கட்சியை சிலர் கைப்பற்றும் நோக்கில் செயல்பட்டு வருகின்றனர். உண்மையான அ. தி. மு. க. தொண்டர்கள் ஒன்றுபட்டு இதனை மாற்றுவோம். எம். ஜி. ஆர்., ஜெயலலிதா ஆகி யோர் வகுத்த நேர் வழிப் பாதையில் செல்வோம் - என்றார். (ஐ)

# 44 இடங்களில் பேரணி நடத்த ஆர். எஸ். எஸ்ஸுக்கு அனுமதி!

சென்னை, நவ. 05

தமிழகம் முழுவதும் 44 இடங்களில் ஆர். எஸ். எஸ். அணிவகுப்பு ஊர்வலத்துக்கு அனுமதி வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஒக்ரோபர் 2ஆம் திகதி ஆர். எஸ். எஸ். அணிவகுப்பு ஊர்வலத்துக்கு அனுமதி வழங்க மறுத்த பொலிஸ் உத்தரவுகளை எதிர்த்து ஆர். எஸ். எஸ். அமைப்பைச் சேர்ந்த 50இற்கும் மேற் பட்டோர் தொடர்ந்த வழக்குகளை விசாரித்த உயர் நீதிமன்றம், நவம்பர் 6ஆம் திகதியன்று ஊர்வலத்தை நடத்த அனுமதிக்குமாறு உத்தரவிட்டது.

மேலும், அதற்கான நிபந்தனைகளை விதித்து, அனுமதி வழங்கும்படி காவல் துறைக்கு உத்தரவிட்டிருந்தது. ஆனால், பல இடங்களில் அனுமதி வழங்கவில்லை எனக் கூறி காவல் துறைக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கு கடந்தமுறை விசாரணைக்கு வந்தபோது காவல்துறை தரப்பில், "ஆர். எஸ். எஸ். ஊர்வலத்துக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று செப்ரெம்பர் 30ஆம் திகதி நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு பிறகு வேறு மாதிரியான சூழல் ஏற்பட்டுள்ளது. அதனை கருத்தில் கொண்டே 3 இடங்களில் மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 23 இடங்களில் உள்ளரங்கு கூட்டமாக நடத்தினால் அனுமதி வழங்க காவல் துறை தயாராக உள்ளது. ஆனால், எஞ்சியுள்ள 24 இடங்களில் அனுமதி வழங்க இயலாது என்று கூறியது.

இந்நிலையில், 44 இடங்களில் ஊர்வலத்தை நடத்துவதற்கு ஆர். எஸ். எஸ். அமைப்புக்கு உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. (ஐ)



# 60 கிலோ கிராம் கஞ்சா சேந்தாங்குளத்தில் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 05

இளவாலை, சேந்தாங்குளம் கடற்கரைப் பகுதியில் இருந்து, 60 கிலோ கஞ்சா இராணுவத்தினரால் கைப் பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவின் தொண்டிப் பகுதியில் இருந்து ஓர் இரகசிய படகு வருவதாக கிடைத்த இரகசிய தகவ லையடுத்து நேற்று வெள்ளிக்கிழமை காலை முன்னெ டுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த கஞ்சா தொகுதி கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதியினை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக இளவாலை பொலிஸாரிடம் இராணுவத்தினர் ஒப்படைத்துள்ளனர். (அ)

# பிளவுண்டுள்ள தமிழ் அரசியல்வாதிகள் முதலில் ஓரணியில் சங்கமிக்கவேண்டும்

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வலியுறுத்து



கொழும்பு, நவ. 05

**''வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்னைகளுக்கும் நிரந்தர தீர்வு காண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தயாராகவுள்ளது. அதற்கு முன்னர் பிளவுபட்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் ஓரணியில் சங்கமிக்க வேண்டும்.''**

- இவ்வாறு வலியுறுத்தினார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

அவர் மேலும் தெரிவித்ததா வது:-

ராஜபக்ஷ அரசு வேறு. ரணில் அரசு வேறு. தற்போது ஆட்சியில் இருப்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு.

இந்த ஜனாதிபதியும் சரி, இந்த அரசில் உள்ளவர்களும் சரி தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்னைக ளுக்கும் நிரந்தரத் தீர்வுகாணத் தயாராகவுள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களின் பிரதி நிதிகளான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் இந்த அரசுடன் நெருங்கிச் செயற் படுகின்றனர். இன்னொரு பகுதி யினர் இந்த மீது நம்பிக்கை வைக் கத் தயங்குகின்றனர். மற்றொரு பகுதியினர் தங்களுக்கிடையிலான கட்சி ரீதியிலான மோதலால் ஒதுங்கி நிற்கின்றனர்.

பிளவுபட்டிருக்கும் தமிழ் அரசி யல்வாதிகள் ஓரணியில் இணைந் தால்தான் அரசுடன் திறந்த மனது டன் பேசி தீர்வு காண முடியும் - என்றார். (அ)

# மீற்றர் வட்டியால் பறிபோனது உயிர்!

யாழ்ப்பாணம், நவ. 05

யாழ்ப்பாணம் நகர் பகுதியில், மீற்றர் வட்டிக்கு பணம் வாங்கிய வர்த்தகர் ஒருவர் தவறான முடிவெ டுத்து உயிரை மாய்த்துள்ளார்.

யாழ்.நகர் பகுதியில் கடை ஒன்றை நடத்தி வந்த 37 வயதான சி.சிவரூபன் என்பரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

சமீப காலமாகவே மீற்றர் வட்டிக்கு வாங்கிய பணத்தைச் செலுத்த முடியாத நிலையில் கடும் மன வுளைச்சலுக்கு ஆளாகியிருந்த அவர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை உயிரை மாய்த்துள்ளார்.

வர்த்தக நோக்கத்திற்காக மீற்றர் வட்டிக்கு வாங் கிய பணத்தொகையின் வட்டி, அதிகரித்து திருப்பி செலுத்தவேண்டிய பணத்தொகை அதிகரித்துக் கொண்டே சென்றதால், அவர் இந்த முடிவை எடுத் திருக்கக்கூடுமென அவரது உறவினர்கள் மரண விசார ணைகளின்போது தெரிவித்தனர். (அ)

# எரிவாயு விலை திருத்தம் குறித்து நாளை அறிவிப்பு

கொழும்பு, நவ. 05

எரிவாயு விலை திருத்தம் குறித்து நாளை மறு தினம் அறிவிக்கப்படும் என லிட்ரோ நிறுவனத் தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர், தனது நிறுவனத்தில் போதுமான அளவு எரிவாயு கையிருப்பு உள்ளது.

விலை குறையும் என வெளியாகும் செய்திகளை கருத்திற்கொண்டு விற்பனை முகவர்கள் கையிருப்புக் கான முன்பதிவுகளை தாமதப்படுத்துவதால் சந்தை யில் தற்போது எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் மீண்டும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாது - என்றார். (அ)

# யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த வகைகளுக்குத் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், நவ. 05

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில், இரத்த வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக இரத்த வங்கி பிரிவு தெரிவித்துள்ளது.

குறிப்பாக பி+ மற்றும் ஓ+ ஆகிய இரத்தங்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக இரத்த வங்கி பிரிவினர் தெரிவித்துள் ளனர்.

இதுதொடர்பாக இரத்த வங்கி பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை



யில், 'இரத்த தானம் செய்ய விரும் பும் குருதி கொடையாளர்கள் யாழ்.போதனா வைத்திய சாலை யின் பின் புறமாக அமைந்துள்ள 12ஆம் இலக்க நுழைவாயில் ஊடாக, இரத்த வங்கிக்கு தினமும் காலை 08 மணி முதல் மாலை 05 மணி வரையில் நேரில் சமூகம் அளித்து குருதிக் கொடை வழங்க லாம்.

இரத்த தான முகாம்களை ஒழுங்கமைப்பு செய்ய விரும்பு வோரும் 0772105375 மற்றும் 0212223063 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ள முடியும்' என தெரி விக்கப்பட்டுள்ளது. (அ)

# மழை நீடிக்கும்

கொழும்பு, நவ. 05

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களி லும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகா ணங்களிலும் புத்தளம் மாவட்டத்திலும் சில இடங் களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்பு களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொது மக்களுக்கு அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# மக்கள் விரும்பிய மாற்றம் இன்னமும் ஏற்படவில்லை

## ரணிலுக்கு சஜித் பதிலடி

கொழும்பு, நவ. 05

இலங்கையில் மக்கள் விரும்பிய மாற்றம் இன்னமும் ஏற்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"நாட்டில் மக்கள் விரும்பிய மாற்றம் ஏற்பட்ட பின்னர் மீண்டும் ஆர்ப்பாட் டங்கள் எதற்கு?ஆர்ப்பாட்டங்கள் மூலம் இந்த அரசைக் கவிழ்க்க முடி யாது என்பதை எதிரணியினர் புரிந்து கொள்ள வேண்டும்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையி லேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் - ராஜபக்ஷ அரசுக்கு எதிரான எமது போராட்டம் - பேரணி தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிப் பது எமது நோக்கம் அல்ல. அடக்குமுறைகளை உடனடியாக நிறுத்தவே கோருகின்றோம்.

அடக்குமுறைகள் தொடர்ந்தால் கோட்டாபய ராஜபக்ஷ போல் ரணில் விக்கிரமசிங்கவும் வீட்டுக்கு ஓட வேண்டி வரும்.

நாட்டு மக்கள் விரும்பிய மாற்றம் இன்னமும் ஏற்படவில்லை. முன்னர் ராஜபக்ஷ அரசு ஆட்சியில் இருந்தது. தற்போது ரணில் - ராஜபக்ஷ அரசு ஆட்சியில் இருக்கின்றது. இதுவா மாற்றம்? இந்த மாற்றத்தையா மக்கள் விரும்பினார்கள்?

மக்கள் இன்னமும் கொதிநிலையில் தான் இருக்கின்றார்கள். மக்கள் பக்கம் நாமும், எமது பக்கம் மக்களுமாக இருக்கின்றோம்.

அதேவேளை, ஆர்ப்பாட்டத்தால் தான் "ஜனாதிபதி கதிரை"யில் தான் அமர்ந்தார் என்பதை ரணில் விக்கிர மசிங்க மறக்கக்கூடாது -என்றார். (அ)

# கொழும்பு போராட்டம் மாபெரும் வெற்றியாம்

## இப்படி சொல்கிறார் சஜித்



கொழும்பு, நவ. 05

"அரசின் அனுமதியின்றி அல்லது பொலிஸாரின் அனுமதியின்றி பேரணிகள் மற்றும் போராட்டங்களை நடத்த முடியாது என்ற கருத்தை முற்றாக மாற்றியமைக்க "நவம்பர் 02" கொழும்பு போராட்டத்தின் மூலம் முடிந்துள்ளது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் உயிர் நாடியாக கருதப்படும் சிறுவர் தலைமுறையை அறிவு,திறமை மற்றும் வசதிகளுடன் பூரணப்படுத்துவது தார்மீக பொறுப்பு என்று நம்பி அதற்கான நிலையான நோக்கை முன்நோக்காகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் சக்வல (பிரபஞ்சம்) வேலைத் திட்டத்தின் கீழ் 39 ஆவது பாடசாலை பஸ் நேற்று முன் தினம் கல்கமுவ யூ.பி.வன்னி நாயக்க தேசிய பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

இதன்போது அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:-

போராட்டம் சட்ட விரோதமானது என எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கட்சி அலுவலகத்துக்கும் பொலிஸார் தனிப்பட்ட முறையில் அறிவித்தனர். இந்த அறிவித்தலை நான் உள்ளிட்ட எவரும் பொருட்டாக கொள்ளவில்லை.

ஜனநாயக ரீதியாக சுயமாகச் செல்வதற்கும், போராட்டத்துக்குச் செல்வதற்கும், போராட்டம் நடத்துவதற்கும் முள்ள அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க முடிந்தமை நவம்பர் 02 ஆம் திகதி அடைந்த மாபெரும் வெற்றியாகும்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது இந்நாட்டின் மாற்று அரசு ஆகும். தற்போது அது எதிர்க்கட்சியாக இருந்தாலும் பொறுப்புடன் நடந்துகொள்கின்றது-என்றார். (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோர் எவரும் உயிரோடு இல்லை!

## நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

கொழும்பு, நவ.05

**"காணாமல் ஆக்கப்பட்டோர் இன்னமும் உயிருடன் இருப்பார்கள் என்பதற்குச் சாத்தியம் மிகவும் குறைவு. அதனால்தான் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது."**



- இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் துயரங்களை - உணர்வுகளை நாம் புரிந்துகொள்கின்றோம். அவர்களை நாம் மதிக்கின்றோம்.

உறவுகளைத் தொலைத்த துயரத்திலும் அவர்கள் மீண்டும் வருவார்கள் என்ற ஏக்கத்துடனும் வாழும் குடும்பங்கள் நீதி கேட்டு அரசுக்கு எதிராகப் போராடுவதில் நியாயம் இருக்கின்றது. ஆனால், அவர்களை வைத்து தமிழ் அரசியல்வாதிகள் சிலர் தமது சுயலாப அரசியலை மேற்கொள்கின்றார்கள். இது மிகவும் கவலைக்குரிய விடயம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் இன்னமும் உயிருடன் இருப்பார்கள் என்பதற்குச் சாத்தியம் மிகவும் குறைவு. இதை அவர்களின் குடும் பத்தினரிடம் கூறினால் அவர்கள் ஏற்கத் தயாரில்லை. நாம் என்ன செய்வது?

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டுதான் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது- என்றார். (அ)

# முட்டை விலை உயராது



கொழும்பு, நவ. 05

முட்டை விலை அதிகரிக்கப்படவில்லை என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

முட்டை விலையை அதிகரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல் உண்மைக்கு புறம்பானது என அந்த அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

அதிகரித்த விலைக்கு முட்டையை விற்பனை செய்பவர்களை அடையாளங் காண்பதற்கான சுற்றி வளைப்புக்கள் தொடர்வதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# பிரச்னைகளை கண்டுகொள்ளாதோருக்கு இனி ஒருபோதும் வாக்களிக்கவேண்டாம்!

## கொழும்பு பேராயர் மல்கம் கோரிக்கை



கொழும்பு, நவ. 05

நாட்டு மக்களின் பிரச்னைகளை கண்டுகொள்ளாத மக்கள் பிரதிநிதிகளுக்கு இனி ஒருபோதும் வாக்களிக்க வேண்டாம் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்திரமான வேலைத்திட்டத்துடன் வறிய சமூகத்துக்காக எழுந்து நிற்கக்கூடிய சட்டத்தை மதிக்கும் தலைமைத்துவத்தினால் மட்டுமே நாட்டின் நெருக்கடிகளைத் தீர்க்கமுடியும் என அவர் சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்பெல்லாம் பிரதேச சபை முறை இருந்தது. நாம் பாராளுமன்ற உறுப்பினரை நியமிக்கும்போது அவர் தனது பிரதேச மக்களை முடிந்தவரை கவனித்துக்கொள்கிறார். ஆனால், தற்போது அவ்வாறில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, இந்த நாட்டு மக்களை உணர்வுடன் கையாளக்கூடிய தலைமைக்கு மட்டுமே வாக்களிக்கவேண்டும்-என்றார். (அ)

# சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 05

இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் 5 இலட்சத்து 68 ஆயிரத்து 258 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியா, ரஷ்யா, இங்கிலாந்து, ஜேர்மனி மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இருந்து அதிகளவிலானோர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் சற்று அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் முதல்10 மாதங்களில் 194, 495 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்திருந்ததாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# பல்கலைக்கழக விடுதியில் மாணவர் குழுமீது தாக்குதல்

கொழும்பு, நவ. 05

களனி பல்கலைக்கழக விடுதி ஒன்றில் மாணவர்கள் குழுவொன்று தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

களனி பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்கள் குழுவொன்று கன்னங்கர விடுதியில் மாணவர்களை தடுத்து வைத்து பல மணிநேரம் தாக்கியதாக கூறப்படுகிறது.

சிரேஷ்ட மாணவர்களால் தாக்கப்பட்டதாக கூறி 05 மாணவர்கள் நேற்று முன் தினம் இரவு ஹோமாகம வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹோமாகம பொலிஸார் தெரிவித்தனர்.

கலைப் பிரிவில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்கும் 05 மாணவர்களே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 02ஆம் திகதி காலை முதல் சிரேஷ்ட மாணவர்களால் விடுதியில் தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

பின்னர் வான் ஒன்றினால் தாக்குதலுக்கு உள்ளான மாணவர்கள் குழு மாலபே பிரதேசத்தில் உள்ள மாணவர் ஒருவரின் உறவினர் வீட்டுக்கு வந்துள்ளது.

அங்கு அவர்களை நவகமுவ பொலிஸாருக்கு அழைத்துச் சென்ற உறவினர்கள், பொலிஸாரின் அறிவுறுத்தலின் பேரில் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவரை கிரிபத்கொடை பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு அறிவுறுத்தியது ஏன் எனக் கேள்வி எழுப்பியே, சிரேஷ்ட மாணவர்கள் தம்மை தாக்கியதாக தாக்குதலுக்கு உள்ளான மாணவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவர்கள் அனைவரும் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர்படுத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மோசமான சூழ்நிலை இலங்கையில் இல்லை

## ஆசிய ஊடக மற்றும் கலாசார சங்கம்

கொழும்பு, நவ. 05

ஊடகங்கள் காட்டுவது போல் இலங்கையில் மோசமான சூழல் இல்லை என்பதால் உலகின் தற்போதைய நிலைவரப்படி முதலில் விஜயம் செய்யும் நாடு இலங்கை என்று ஆசிய ஊடக மற்றும் கலாசார சங்கம் தெரிவித்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் நேற்று முன் தினம் வியாழக்கிழமை முற்பகல் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அந்தச் சங்கம் இதனை தெரிவித்துள்ளது.

இலங்கையில் சுற்றுலாத்துறையை விரைவாக மீட்டெடுப்பதற்கு பூரண ஆதரவை வழங்கவுள்ளதாக அந்த சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையிலிருந்து விடுபட இலங்கைக்கு உடனடியாக நிதி மறுசீரமைப்பு வசதிகளை வழங்கியமைக்காக இந்தியாவுக்கு பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்தார். (அ)

# மைத்திரிக்கு கொரோனா!

கொழும்பு, நவ. 05

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.



கொரோனா தொற்றுக் கான அறிகுறிகள் தென்பட்ட தையடுத்து, முன்னாள் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பு ஐடிஎச் வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக சென் றுள்ளார். (அ)

# நாட்டில் 5.7 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவை!

## ஐக்கிய நாடுகள் அமைப்பு தகவல்

கொழும்பு, நவ.05

**இலங்கையில் குறைந்தது 5.7 மில்லியன் மக்களுக்கு மனிதா பிமான உதவிகள் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபி மான விவகாரங்களின் ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.**

அந்த அலுவலகம் நேற்று முன் தினம் வியா ழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

இது நாட்டின் சனத்தொகையில் 26 வீதத் துக்கு சமம் எனவும் 96 வீதமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையைத் தயாரிக்க இலங் கையின் ஒன்பது மாகாணங்களின் 11 மாவட் டங்களில் உள்ள 2 ஆயிரத்து 871 குடும்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள் ளது. (அ)

# ஓ.எல். பரீட்சை முடிவு இந்த மாத இறுதியில்!

கொழும்பு, நவ. 05

2021 க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதியில் வெளியி டப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள் ளது.

எவ்வாறாயினும் வெளி யீட்டு திகதி முன்கூட்டியே அறிவிக்கப்படாது என பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் எல்எம்டி தர்மசேன தெரிவித் துள்ளார்.

2021 ஓ.எல். பரீட்சைக்கு மொத்தம் 517,496 மாணவர் கள் தோற்றனர். இவர்களில், 407,129 மாணவர்கள் பாட சாலை விண்ணப்பதாரர்கள். 110,367 மாணவர்கள் தனியார் விண்ணப்பதாரர்கள்.

2021 க.பொ.த சாதாரண பரீட்சை 2022 பெப்ரவரி 21 ஆம் திகதி முதல் 2022 மார்ச் 3 ஆம் திகதி வரை நடைபெற்றது.

அதேவேளை, 2022 க.பொ.த சாதாரண பரீட்சை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைக்கு பின்னர் அடுத்த வருடம் நடத்தப்படும். (அ)

# கர்ப்பிணி தாய்மார்களுக்கான போஷாக்குத் திட்டம் முடக்கம்!

கொழும்பு, நவ. 05

போஷாக்கு பொதிகளை வழங்கும் திட்டம் பல மாதங்க ளாக முடங்கிக் கிடப்பதாகவும், தற்போது உணவு மற்றும் பொருட்களின் விலையேற் றத்தால் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் கர்ப் பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தெரி விக்கின்றனர்.

இது தொடர்பில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன கருத்து தெரிவிக்கையில், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார் களுக்கு போஷாக்கு பொதி களை வழங்கும் திட்டம் நிதி பற்றாக்குறையால் முடங்கி யுள் ளது.

அதனை மீள ஆரம்பிப்பதற் கான ஏற்பாடுகள் நடை பெறுகின்றன. இந்த மாதத் துக்குள் அதற்கான மானி யங்கள் கிடைக்கப்பெறும். அதன் பின்னர் உடனடியாக ஆரம்பிக்கப்படும்.

இந்த போஷாக்கு திட் டத்தின் கீழ் 155,000க்கும் அதிகமான கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 4,500 ரூபா பெறுமதியான போஷாக்கு பொதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப் படும்-என்றார். (அ)

# இலங்கை இளைஞர்களிடையே அதிகரிக்கும் இரசாயன பாலுறவு!

கொழும்பு, நவ. 05

இலங்கையில் இரசாயன பாலுறவு எனப் படும் போதைப்பொருள் பாவனையின் பின்னரான பாலுறவு கலாசாரம் அதிகரித்து வரும் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

18 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர் களிடையே ஐஸ் போதைப் பொருள் பாவனை யின் பின்னரான இரசாயனப் பாலுறவு அதிக ரித்துள்ளதாகவும், இதற்கு முன்னர் இவ் வாறான ஆபத்தான பாலுறவு நடைமுறையில் இருந்தபோதிலும், தற்போது அது அதிகரித் துள்ளதாகவும் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மதுபானம் மற்றும் சில போதைப்பொருட் களின் பயன்பாடு அதிகரித்து வருவதால், கெமிக் கல் என பிரபலமாக அறியப்படும் கெமிக்கல் செக்ஸ் அல்லது செம்செக்ஸ் தற்போது நாட் டில் பிரபலமாகி, பாலியல் ரீதியாக பரவும் நோய்களின் அபாயத்தை உயர்த் தியுள்ளது.

போதைக்கு பிறகு உடலுறவில் ஈடுபடும் ஆண்களிடையேயும் (ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள்) செம்செக்ஸ் அடிக்கடி நடைமுறைப்படுத்தப்படுகிறது" என்று ரசாஞ் சலி கூறினார்.

செம்செக்ஸ் என்பது பாலியல் அனுப வத்தை எளிதாக்க, நீடிக்கவும் தீவிரப்படுத்த வும், முக்கியமாக ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் சில ஆண்களின் சமூகங்களால் பாலியல் செயல்பாடுகளுக்கு முன் சில பொருட்களைப் பயன்படுத்துவதாக வரைய றுக்கப்படுகிறது.

அமெரிக்காவிலும் கனடாவிலும் இது பார்ட்டி 'என்' ப்ளே அல்லது பிஎன்பி என அழைக்கப்படுகிறது. ஐரோப்பாவிலும் ஆசி யாவிலும் இது செம்செக்ஸ் என்று அழைக் கப்படுகிறது.

பிஎன்பி மற்றும் செம்செக்ஸ் ஆகிய இரண் டும் செக்ஸ் பார்ட்டிகள் போன்ற பொழுது போக்கு சந்திப்புகள் மற்றும் பாலியல் தொழி லாளர்கள் மற்றும் அவர்களது வாடிக்கையா ளர்களுக்கு இடையே பணம் செலுத்திய அனுபவங்கள் ஆகியவை அடங்கும்.

உலகெங்கிலும் உள்ள பிஎன்பி மற்றும் செம்செக்ஸில் ஐஸ் போதை மருந்தே பொது வாக பயன்படுத்தப்படுகிறது.

குறிப்பாக கொழும்பிற்குள்ளேயே பல இளைஞர் குழுக்களும் இவ்வாறான பாலியல் நடத்தைகளில் ஈடுபடுவதாக ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

போதைக்கு மெத்தம்பேட்டமைன் (ஐஸ்) போன்ற மருந்துகளை பயன்படுத்தும் குழுக்கள் அதன் ஆபத்துகளை அறியாமல் செம்செக்ஸில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலான குழுக்கள் மேல் மாகாணத்திலும் கம்பஹா மாவட்டத் திலும் அமைந்துள்ளன.

மெத்தம்பேட்டமைன், மெபெட்ரோன் மற்றும் கெட்டமைன் போன்ற நான்கு பொருட்கள் பொதுவாக கெம்செக்ஸுடன் தொடர்புடையவை என்றும், போதைப் பொருள் விற்பனையாளர்களிடையே ஐஸ் கிடைப்பதால், அதன்பின் பாலியல் நடத்தை யில் ஈடுபடும் இளைஞர்களிடையே பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும் மருத்துவ வட்டா ரங்கள் தெரிவித்தன.

"கொழும்பில் போதைப்பொருள் உட் கொண்ட பின்னர் உடலுறவு கொள்ளும் குழுக் கள் உள்ளன, எனவே கொழும்பில் கெம்செக்ஸ் பரவுவது அதிகரித்துள்ளது" என்று ஹெட்டி யாராச்சி கூறினார்.

தற்போது எச்ஐவி அதிகரித்து வருவதற்கு தற்போது கவலை அளிக்கும் வகையில் செம் செக்ஸும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இளைஞர் களிடையே கோனோரியா மற்றும் சிபிலிஸ் போன்ற பாலியல் ரீதியாக பரவும் நோய்த் தொற்றுகள் அதிகரித்து வருவதாக வட்டாரங் கள் தெரிவித்தன. (அ)

# ஜனாதிபதியின் கடிதத்துக்கு பதிலளித்தார் சபாநாயகர்!

கொழும்பு, நவ. 05

எதிர்க்கட்சியின் பிரதிநிதி கள் நியமிக்கப்படாமையால் துறைசார் மேற்பார்வைக் குழுக் களை செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சபா நாயகர் மஹிந்த யாப்பா அபே வர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட் சித் தலைவருக்கு பல தடவை கள் அறிவிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அதற்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்க வில்லை என்றும் சபாநாயகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துறைசார் மேற்பார்வைக் குழுக்களை செயற்படுத்துவ தற்கு அண்மையில் பாராளு மன்றம் ஒப்புதல் அளித்தது.

இதன் பிரகாரம் 17 துறை சார் மேற்பார்வைக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

அடுத்த வாரம் நடை பெறும் பாராளுமன்ற அமர் வின் பின்னர் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பிலான தீர்மானத்தை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகளுக்கு அமைய 17 பாராளுமன்ற துறைசார் மேற் பார்வை குழுக்கள் ஸ்தாபிக்கப் பட வேண்டியுள்ள நிலையில் அவற்றுக்கான தலைவர்கள் இது வரை நியமிக்கப்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க சபாநாயகருக்கு நேற்று முன் தினம் எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

நீண்டகால முறைமை மாற் றங்களை கொண்டுவருவதற் கான முன்மொழிவுகளை நடை முறைப்படுத்துவதில் பாராளு மன்றத்தில் தாமதம் காணப் படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கடிதத் தில் குறிப்பிட்டிருந்தார். (அ)

# தொழுநோயாளருக்கு சிகிச்சை; விசேட வேலைத்திட்டம் அறிமுகம்

நாட்டில் தொழுநோயாளர்களை இனங்கண்டு அவர்க ளுக்கு சிகிச்சையளிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொழுநோய் ஒழிப்பு இயக்கத் தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பிரசாத் ரணவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 3 மாதக்காலப்பகுதியினுள் கொழும்பு மாவட் டத்தில் 168 தொழு நோயாளர்களும், கம்பஹா மாவட் டத்தில் 114 தொழுநோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் களுத்துறை மாவட்டத்தில் 82 தொழு நோயா ளர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 126 தொழு நோயாளர்களும் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஆறு மாதங்களில், 2017 ஆம் ஆண்டு தொழு நோய் பதிவான நோயாளர்களின் உறவினர்களை பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்மூலம் தொழு நோயாளர்களை உரிய வகையில் அடையாளங் காண முடியும் சுகாதார அமைச்சின் தொழுநோய் ஒழிப்பு இயக்கத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பிரசாத் ரணவீர கூறினார். (அ)

# வடகொரியா ஏவுகணை வீச்சு:

## தென்கொரியா, ஜப்பானை நோக்கி 'கண்டம் விட்டு கண்டம்' பாயும் ஏவுகணை!




வட கொரியா ஒரு நெடுந்தொலைவு பாலிஸ்டிக் ஏவுகணை மற்றும் இரண்டு குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியுள்ளதாக தென் கொரியாவின் கூட்டுப் படைத் தலைவர்கள் தெரிவித்தனர்.

அதில் ஒன்று கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையாக இருக்கலாம் என்று ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா கூறுகிறார்.

தென் கொரியாவின் பிராந்திய கடல் பகுதிக்கு அருகில் விழுந்த ஒரு ஏவுகணை உட்பட வட கொரியா புதன்கிழமை ஒரே நாளில் அதிகமாக ஏவுகணைகளை ஏவியதைத் தொடர்ந்து இது நடந்துள்ளது.

அதற்கு பதிலடியாக தென் கொரியா மூன்று ஏவுகணைகளை வீசியது.

இதுகுறித்து "ஆக்கிரமிப்பு மற்றும் ஆத்திரமூட்டும்" நடவடிக்கை என்று வட கொரியாவை கடுமையாக விமர்சித்துள்ள, அமெரிக்காவும் தென் கொரியாவும் இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய கூட்டு விமானப் படை பயிற்சிகளை நடத்தி வருவதைத் தொடர்ந்து, வட கொரியாவின் பல




ஏவுகணை ஏவும் செயல்கள் நடந்துள்ளன.

வியாழனன்று காலை நேரத்தில் சமீபத்தில் ஏவப்பட்ட ஏவுகணை, ஜப்பான் அரசு அதன் வடக்குப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு, வீட்டிற்குள்ளேயே இருக்குமாறு ஓர் அரிய அவசர எச்சரிக்கையை வழங்க வழி வகுத்தது.

ஜப்பான் மீது ஏவுகணை பறந்ததாக டோக்கியோ கூறியது. ஆனால், பாதுகாப்பு அமைச்சர் யசுகாசு ஹமாடா, அது "ஜப்பானிய தீவுக்கூட்டத்தைக் கடக்கவில்லை. ஜப்பான் கடல் பகுதியில் விழுந்தது," என்றார்.

பின்னர், பிரதமர் கிஷிடா வட கொரியாவின் "தொடர் ஏவுகணை ஏவுதல்களை", "அட்டூழியம்" என்று குறிப்பிட்டு கண்டனம் செய்தார்.

இதற்கிடையில், தென் கொரியாவின் துணை வெளியுறவு அமைச்சர் சோ ஹ்யூன்-டாங், அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சர் வெண்டி ஷெர்மன் ஆகியோருக்கு இடையே வியாழக்கிழமையன்று நிகழ்ந்த தொலைபேசி அழைப்பின்போது இந்த நடவடிக்கை "வருந்தத்தக்கது, முறையற்றது" என்று தென் கொரியா தெரிவித்துள்ளது.

வட கொரியா கடந்த ஐந்து ஆண்டுகளில் முதல் முறையாக, ஜப்பானை நோக்கி ஒரு பாலிஸ்டிக் ஏவுகணையை ஏவி ஒரு மாதம் கழித்து இது நடந்துள்ளது.

பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் வட பகுதியில் இந்த ஆண்டு ஏவுகணை வீச்சுகளும் முன்னெப்போதும் இல்லாத அதிகரித்திருக்கிறது.

பொருளாதாரத் தடைகள் இருந்த போதிலும், வட கொரியா 2006 மற்றும் 2017ஆம் ஆண்டுக்கு இடையில் ஆறு அணு ஆயுத சோதனைகளை நடத்தியது. மேலும் ஏழாவதாக ஒரு சோதனையைத் திட்டமிடுவதாகவும் நம்பப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு மன்றத்தின் தீர்மானங்களை மீறும் வகையில், அண்டை நாடுகளை அச்சுறுத்துவதோடு அமெரிக்க நிலப்பரப்பை தாக்குதல் பரப்புக்குள் கொண்டு வரக்கூடிய வகையில் அதன் ராணுவ திறனை தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

புதன்கிழமை ஏவப்பட்டதில் வட கொரியாவின் பாலிஸ்டிக் ஏவுகணை ஒன்று இரண்டு கொரியாக்களுக்கும் இடையில் சர்ச்சைக்குரிய கடல் எல்லையான வடக்கு எல்லைக் கோட்டைத் தாண்டியது.

இந்த ஏவுகணை தென் கொரியாவின் கடல் எல்லைக்கு வெளியே விழுந்தது. இதுவே எல்லைக்கு மிகவும் அருகில் நெருங்கி வந்த வட கொரிய ஏவுகணை.

தென் கொரியாவின் போர் விமானங்கள் மூன்று வான்-தரை ஏவுகணைகளை ஏவியதுடன் அதுவும் சர்ச்சைக்குரிய கடல் எல்லைக் கோட்டை தாண்டியது.

வடக்கு ஜப்பானில் வசிக்கும் மக்களுக்கு இதுவொரு குழப்பமான அச்சுறுத்தலான காலை.

காலை 7:50 மணிக்கு, மியாகி மற்றும் யமகட்டா மாகாணங்கள் முழுவதும் வான்வழித் தாக்குதலுக்கான சைரன்கள் ஒலிக்கப்பட்டன. மக்களை தஞ்சம் அடையச் சொல்வதற்காக தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டன.

வட கொரியாவில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணை ஜப்பானை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக ஜப்பானிய கடலோர காவல்படை தெரிவித்தது. பின்னர் அவர்கள் அந்த அறிக்கையைத் திரும்பப் பெற்றனர். அதற்கு பதிலாக ஜப்பானிய நிலப்பரப்பைக் கடக்காமல், ஜப்பானிய நிலப்பரப்பை அடையும் முன்பாகவே ஏவுகணை கடலில் விழுந்தது.

ஏவுகணையின் பாதை மற்றும் காலம் (சுமார் 30 நிமிடங்கள்) ஆகியவற்றைக் கொண்டு அதிகாரிகள் ஏவுகணையைக் கண்காணிக்கும்போது, அது ஜப்பான் மீது செல்லும் என்று நினைத்ததாகத் தெரிகிறது. அதற்குப் பதிலாக, அது வானில் உயரமாகப் பறந்து பிறகு செங்குத்தாக மீண்டும் திரும்பி ஜப்பான் கடலுக்குள் சென்றதாகத் தெரிகிறது.

எனவே தவறான எச்சரிக்கை, அனைவரும் அமைதியடைந்து, காலையின் வழக்கமான பணிகளுக்குத் திரும்பலாமா என்றால் இல்லை. முதலாவதாக அண்டை நாடுகளை நோக்கி எச்சரிப்பின்றி பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவுவது, அந்த ஏவுகணை எங்கே விழும் என்பதை யூகிக்க விட்டு விடுவது போன்ற நடவடிக்கைகள் சாதாரணமானதல்ல. இது மிகவும் ஆத்திரமூட்டும், ஆபத்தான நடவடிக்கை. இது சர்வதேச விதிமுறைகளுக்கு முற்றிலும் புறம்பானது.

இரண்டாவதாக, வட கொரியாவில் இருந்து தென் கொரியாவின் கடற்கரைக்கு அப்பால் உள்ள கடல்களில் ஏவுகணைகள் ஏவப்பட்ட ஒரு நாளுக்குப் பிறகு இது நடந்துள்ளது.

வட கொரியா தனது அண்டை நாடுகளுடன் வேண்டுமென்றே பதற்றத்தை அதிகரித்து வருகிறது. இது அணுஆயுத சோதனை, அல்லது பசிபிக் பகுதியில் ஒரு முழு நெடுந்தொலைவு பாலிஸ்டிக் ஏவுகணை சோதனை அல்லது இரண்டுமே அடங்கிய சோதனை போன்ற பெரிய விஷயத்தை வட கொரியா உருவாக்குவதாக இது இருக்கலாம்.

சர்வதேச கவனத்தை ஈர்ப்பதற்கும் தென் கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவை சலுகைகள் மற்றும் உரையாடல்களை வழங்க கட்டாயப்படுத்துவதற்கும் கடந்த காலங்களில் வட கொரியா பயன்படுத்திய முறை இது. தற்போது மீண்டும் அவ்வாறு நடந்து வருகிறது.

ஆனால் வட கொரியா அதன் ஏவுகணை தொழில்நுட்பத்தை - குறிப்பாக அதன் நீண்ட தூர ஏவுகணைகள், மறுநுழைவு வாகனங்களை - முழுமையாக்குவதில் இன்னும் வெகு தூரத்தில் உள்ளது. எனவே, இதுபோன்ற சோதனைகள் ஜப்பானை மட்டுமல்ல, அமெரிக்காவையும் நோக்கியே மேற்கொள்ளப்படுகின்றன.



அமெரிக்காவை அடையக் கூடிய நம்பகமான நீண்ட தூர ஆயுதங்களை வைத்திருப்பதே வட கொரியாவின் நோக்கம்.

வட கொரியாவின் நோக்கம் ஜப்பானை அடிபணிய வைப்பது என்றால், அது எதிர் விளைவையே ஏற்படுத்துகிறது. ஜப்பானின் வலதுசாரி நீண்டகாலமாக நாட்டை மீண்டும் ஆயுதம் ஏந்தவும் போருக்குப் பிந்தைய அமைதிவாத அரசியலமைப்பைக் கைவிடவும் விரும்புகிறது. (பிபிசி)

ஈழநாடு



# தமிழ் தேசியக் கூட்டமைப்பு உடனடியாகச் செய்யவேண்டியது என்ன?

என். விஜேன்







சேர சோழ பாண்டியர்களை விட தற்போது பிரிந்து கிடக்கும் கட்சிகளால் தமிழ் இனம் நாதியற்று கிடக்கிறது. புலம்பெயர் கூட்டத்தின் பணத்திற்காக எல்லாவற்றையும் எதிர்க்கும் கஜேந்திரகுமார் மற்றும் நிலையில்லாத வேலைத்திறனில்லாத விக்னேஸ்வரன் வகையறாக்களை தவிர்த்து கூட்டமைப்பை மட்டும் அலசுவோம்.

2020 தேர்தலில் அவமானகரமான தோல்விக்கு பின் கட்சியை கட்டி எழுப்பி மக்களை வழி நடத்துவதை விட்டு இன்னமும் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டும் இவர்களை என்னவென்று சொல்வது?. சம்பந்தனுக்கு 90 இலும் பதவி ஆசை தீரவில்லை. வைக்கோல் பட்டறை நாய் போல் ஒரு முக்கியமான பிரதேசமான திருகோணமலையை அநாதையாக வைத்து அரசின் கண் மூடித்தனமான அபகரிப்பு அட்டூழியங்களுக்கு மறைமுகமாக துணை போகிறார். மாவையோ முதலமைச்சர் கனவில் இருப்பதால் மற்றவை பற்றி துளி கூட அக்கறை இல்லை.

சுமந்திரன் என்னதான் சட்ட வல்லுநராக இருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்காக இலவசமாக வழக்குகளில் ஆஜாரானாலும் அவரின் அதிமேதாவித்தனத்தாலும் தன்னிச்சையான செயற்பாடுகளாலும் மற்றவர்களை அரவணைத்துச் செல்லும் பாங்கு இல்லாததாலும் தனிமைப்பட்டு நிற்கிறார்.

கிளிநொச்சி சிற்றரசன் சிறீதரன் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் போல் தமிழ் மக்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் ஆனால் 13 ம் திருத்தம் ஏற்புடையதல்ல என்கிறார். சாணக்கியன் இளைய விடிய வெள்ளி. ஆனால் சரியாக வழிநடத்தபடவில்லை. கிழக்கு மக்களின் அன்றாட அரசியல் பொருளாதார மற்றும் சமூக வாழ்வில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும். ரெலோ செல்வம் அன்கோ ஏதோ ஒரு பக்கம் தம்பாட்டிற்கு குறுக்கால் இழுத்து கொண்டு போய் தாங்கள் தான் தமிழர்களுக்காக உண்மையாக குரல் கொடுப்பது போல் காட்ட முனைகிறார்கள். சித்தார்த்தன் அத்தி பூத்தாற்போல் தானும் இருப்பதை நினைவூட்ட அவ்வப்போது அறிக்கைகள் விடுகிறார். மற்றைய எம்.பி.க்கள இருப்பதும் தெரியாது, போவதும் தெரியாது.

மொத்தத்தில் எல்லா தமிழ் அரசியல்வாதிகளும் (டக்ளஸ் தவிர) நம் தலையில் மிளகாய் அரைக்கிறார்கள். 2020 தேர்தல் பின்னடைவுக்கு பின் சுய பரிசோதனை செய்து தவறுகளை திருத்திக் கொள்ளாமல் மேலும் மேலும் அதல பாதாளத்தை நோக்கி இனத்தை இழுத்து செல்கிறார்கள்.

இந்நிலையில் பின்வரும் மாற்றங்களை இவர்கள் அமுல் படுத்தாவிட்டால் அடுத்த தேர்தலில் கூண்டோடு மண் கவ்வுவது நிச்சயம். தற்போதைய காலத்தின் தேவைகளை உணர்ந்து இந்த கூட்டமைப்பினர் பின்வரும் நிகழ்ச்சி நிரலை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்பதே பெரும்பான்மை தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

1. தமிழரசு டெலோ உட்பட எல்லா கட்சிகளும் கலைக்கப்பட்டு தமிழ் ஐக்கிய முன்னணி என்ற ஒரே கட்சியாக இயங்க வேண்டும். ( இல்லையேல் கூட்டணியில் இருந்து அவரவர் விலகி தனித்து நிற்க வேண்டும்).

2. சம்பந்தர் இளைப்பாறி அப்பதவி திருகோணமலையை சேர்ந்த தகுதி வாய்ந்த ஒருவருக்கு வழங்க வேண்டும். சம்பந்தர் கட்சியின் கௌரவ தலைவராக ஆலோசகர் பதவி வகிக்கலாம். இந்நிலையில் ஒரு தகுதி வாய்ந்த தலைவரையும் செயளாளரையும் உடனடியாக தேர்வு செய்ய வேண்டும்.

3. தன்னிச்சையான அறிக்கைகள் பத்திரிகையாளர் கூட்டங்கள், அரசியல் சந்திப்புகள்,வெளிநாட்டு அரசியல் ரீதியான பயணங்கள் எல்லாம் தவிர்க்கப்பட்டு கட்சியின் அனுமதியடனேயே இனி இவை அனைத்தும் மேற்கொள்ளபட வேண்டும்.

4. 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் பாராளுமன்ற தேர்தலில் கட்சி சார்பில் போட்டியிட்ட அனுமதிக்க கூடாது. தகுதி மிக்க 35 -50 வயதிற்கு உட்பட்ட இளையவர்களுக்கு 50 வீத இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும். பெண்களுக்கு குறைந்த பட்சம் 20 வீத இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

5. தேர்வு செய்யபட்ட ஒவ் வொரு எம்.பி.க்கும் ஒவ்வொரு துறைகளை மேற்பார்வை செய்ய ஒழுங்கமைக்கப்பட்ட வேண்டும். இவை வடக்கு கிழக்கில் உள்ள பின்வரும் துறைகளாகும்

வெளிநாட்டு உதவியுடன் பெரிய தொழிலகங்களை உருவாக்க வேண்டும். (large industries)

வேலை வாய்ப்புகளை அதிகரித்தல். சிறிய நடுத்தர கைத்தொழில்களை ஊக்குவித்தல். NorthEast SME Bank ஒன்றை புலம்பெயர் சமூகத்தின் உதவியுடன் உருவாக்கி இலகு கடன் திட்டங்களை வகுத்தல் மூலம் இவற்றை வளர்க்க உதவலாம். இவற்றின் மூலம் இளைஞர்களிடையே உள்ள வெளிநாட்டு மோகத்தை உடைக்கலாம்.

விவசாயத்துறையையும் நீர்ப்பாசன துறைகளையும் ஒருங்கிணைத்து உற்பத்தியை அதிகரித்தும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தைபடுத்தலையும் முறைப்படுத்துதல். சொட்டு நீர்ப்பாசனம் சூரிய சக்தி தண்ணீர் பம்புகள் கலப்புசேதன உரம் பாவனை போன்ற நவீன திட்டங்களை உருவாக்குதல்.



தாழ்ந்து போயுள்ள கல்வித் துறையை மீண்டும் மேம்படுத்தல். மேலும் தொழில்நுட்ப கல்லூரிகள் பலவற்றை உருவாக்கி இளைஞர் சமூகத்தின் வளமான எதிர்காலத்திற்கு வித்திடல். விளையாட்டு துறைகளிலும் மாணவர்கள் இளைஞர் யவதிகளை ஊக்குவித்து உலகத்தரம் வாய்ந்த வீரர்களை உருவாக்க வேண்டும்.



குளங்கள் தூர்வாரப்பட்டு ஆறுகளை விரிவாக்கி கடலில் கலக்கும் மழை நீரின் அளவை குறைத்து நிலத்தடி நீர் வளத்தை அதிகரித்தல்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய பாரிய காடாக்கல் திட்டங்களை உருவாக்கி பசுமை வளத்தை அதிகரித்தல்.



பனை உற்பத்திகளை பெருக்குதல். பனஞ்சீனி தொழிற்சாலைகளை நிறுவுதல். அதேநேரம் பாரிய தென்னஞ் செய்கையை மேற்கொள்வதுடன் உலகத் தரம் வாய்ந்த தேங்காய் எண்ணெய் ஆலை ஒன்றை நிறுவி ஏற்றுமதிக்கு வழிவகுத்தல்.

பல பறவைகள் சரணாலயங்களையும் பெரும் மரப்பூங்காக்களையும் பொருத்தமான இடங்களில் அமைத்து உள்ளூர் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரித்தல்.

சமூக பொருளாதாரப் பிரச்சி னைகள் முக்கியமாக போதைப் பொருள் பாவனையிலிருந்து இளைஞர்களை மீட்டெடுத்தல்.

பலாலி மட்டுநகர் விமான நிலைய விஸ்தரிப்பு வேலைகளை இந்திய அரசின் உதவியுடன் உடனடியாக ஆரம்பிக்க அரசிற்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வரவேண்டும். (ஈழநாடு பத்திரிகையில் ஆசிரியர் குறிப்பிட்டது போன்று இதற்கான காணி சுவீகரிப்பு நடக்கும் போது தொப்பியை பிரட்டி காணிகள் பறிபோகுதே என்று கூக்குரல் இடக் கூடாது).

வடக்கு கிழக்கில் உள்ள பிரதான நகரங்களின் வீதிக் கட்டமைப்புகளை விரிவாக்கி அபிவிருத்தி செய்ய வேண்டும்.

> சில புலம்பெயர் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு தாளம் போட்டதும் இனிமேல் போதும் ஏனெனில் அவர்களில் சிலர் இங்கே பிரச்சினைகள் தீர்க்கப்பாடாமல் நெருப்பு போல் என்நேரமும் கனன்று கொண்டிருக்க வேண்டும் என விரும்புகிறார்கள்.

மீனவர் எதிர் நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண வழிவகுக்க வேண்டும். மீன்பிடி துறை முகங்களை அபிவிருத்தி செய்வதும் பலாலி, மட்டு நகர் விமான நிலையங்களிலிருந்து நேரடியாக ஏற்றுமதி செய்து கொழும்பில் இருந்து ஏற்றுமதி செய்வதால் ஏற்படும் காலவிரயத்தை தவிர்க்க உதவ வேண்டும்.

இந்தியாவில் அவதியுறும் அகதிகளை நாட்டில் மீள் குடியமர்த்தி வாழ்வாதாரங்களை இந்திய மற்றும் புலம் பெயர் தமிழர்கள் உதவியுடன் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். இதன்மூலம் குறைந்த இன் விகிதாசாரமும் கூடுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

யுத்தத்தில் கணவன் பிள்ளைகளை இழந்த குடும்பங்களுக்கு வேலை வாய்ப்புகளையும் சுய தொழில் வாய்ப்புகளையும் புலம்பெயர் சமூகம் மூலமாக ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். மேலும் வடக்கு கிழக்கில் ஜனத்தொகை பெருக ( இழந்து போன) ஊக்குவித்து போஷாக்கு போன்ற அத்தியாவசிய காரணிகளை சமூகத்தில் மேம்படுத்தல் வேண்டும்.

இவற்றை போல இன்னும் பல இருந்தாலும் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட்டு உள்ளேன். இத்தகைய வேலைத்திட்டங்களுடனும் தேர்ந் தெடுக்கப்பட்ட கல்வியறிவு கொண்ட இளைஞர்களை முன்னிறுத்தி இவற்றை துடிப்புடன் அமுல்படுத்துவதாக தமிழ் மக்களுக்கு உத்தரவாதம் அளிப்பதன் மூல மும் மட்டுமே கூட்டமைப்பினர் இனி எம்முன் வர வேண்டும். வெறும் வாய்ச் சவாடல்களும், பழம் பெருமை பேசுவதும், சிலை திறப்பு விழாக்கள், நினைவேந்தல்களில் பங்குபற்றுவது போன்றவை தான் இவர்களின் கடமை அல்ல. மக்கள் எதிர்பார்ப்புகள் ஏராளம் உண்டு.

மேலும் நடைமுறையில் சாத்திய மற்ற சமஷ்டி மற்றும் வடக்கு கிழக்கு இணைப்பு கோஷங்களை வைத்து கொண்டு எவ்வித தீர்வுகளையும் வர விடாமல் குறுக்கே நிற்கும் நடவடிக்கைகளை தற்போது நிறுத்த வேண்டும். அத்துடன் சில புலம்பெயர் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு தாளம் போட்டதும் இனிமேல் போதும் ஏனெனில் அவர்களில் சிலர் இங்கே பிரச்சினைகள் தீர்க்கப்பாடாமல் நெருப்பு போல் என்நேரமும் கனன்று கொண்டிருக்க வேண்டும் என விரும்புகிறார்கள்.

அப்போது தான் அவர்கள் அங்கே சௌகரியமாக கடை விரிக்க முடியும். ஆதலால் கூட்ட மைப்பினரே, இன்னொரு முறை உங்கள் பூச்சுற்றல் வேலைகள் எடுபடாது. நீங்களாக மாறவில்லை அன்றேல் திருந்தவில்லை என்றால் அனைவரும் குப்பை தொட்டிக்குள் வீசப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL


- 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

---

கல்வி tv CHANNEL-1

**05.11.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**05.11.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கல்முனை சந்தான்கேணியில் தனியாரின் ஆக்கிரமிப்பை தடுக்க அவசர நடவடிக்கை

நிந்தவூர், நவ. 05

கல்முனை சந்தான்கேணியில் தனியார் ஆக்கிரமிப்பை தடுக்க அவ சர நடவடிக்கை முன்னெடுக்கப்பட விருக்கின்றது. கல்முனை சந்தான் கேணி ஐக்கிய விளையாட்டு மைதா னக் காணியில் தனி நபர்களினால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்ற நிலப் பகுதிகளை மீட்பதற்கான நடவ டிக்கைகளை துரிதப்படுத்துவதற் கான விசேட ஆலோசனைக் கூட்டம் கல்முனை மாநகர முதல்வர் செயல கத்தில் இடம்பெற்றது.

மாநகர முதல்வர் சிரேஷ்ட சட் டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினர்களான சட்டத் தரணி ரொஷான் அக்தர், எம்.எஸ்.எம்.நிஸார், மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, மாநகர



சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ். எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே. ஹலீம் ஜௌஸி, வேலைகள் அத்தி யட்சகர் வி.உதயகுமரன் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களு டன் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கல்முனை சந்தான் கேணி விளையாட்டு மைதான எல் லைகளில் இடம்பெறும் அத்துமீறல் கள், அனுமதியற்ற கட்டுமானங்கள் மற்றும் சட்டவிரோத குடியேற்றங் கள் போன்ற விடயங்களை தடுத்து நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய துரித நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இம்மைதானக் காணியின் எல் லைப்பகுதிகளில் கடந்த 25 வரு டங்களுக்கு மேலான காலப் பகுதி களில் தனி நபர்களின் அத்துமீறல்கள் காரணமாக அதன் பரப்பளவானது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தி ருப்பதாகவும் இயற்கையாக நீர் வடிந் தோடும் கால்வாய் கூட அடைக்கப் பட்டிருப்பதாகவும் இதன்போது சுட் டிக்காட்டப்பட்டது.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து, விளையாட்டு மைதானத்திற்கு கள விஜயம் மேற்கொண்ட மாநகர முதல் வரும் அதிகாரிகளும் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளும் நிலை மைகளை ஆராய்ந்ததுடன் அவசர மாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கான அறிவுறுத் தல்களை சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு மாநகர முதல்வர் வழங்கியுள் ளார். (அ-06)

# விலை உயர்ந்த 5 கஜமுத்துக்களை விற்பனை செய்ய முயன்றவர் கைது!

அம்பாறை, நவ. 05

அம்பாறை ஹிங்குரான வீதியி லுள்ள ஹோட்டலுக்கு அருகில் வைத்து விலையுயர்ந்த 5 கஜமுத்துக்களை விற் பனை செய்ய முயற்சித்தார் என்ற சந்தேகத்தில் ஒருவர் விசேட அதிர டிப்படையினரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

சந்தேக நபர் இந்த கஜமுத்துக்களை விற்பனை செய்யத் தயாராக விருப்ப தாக கிடைத்த இரகசிய தகவலை யடுத்து, சுற்றிவளைப்பு மேற்கொள் ளப்பட்டதாக விசேட அதிரடிப்படை யினர் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிராந்துருகோட்டை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். மேலதிக விசார ணைகளுக்காக அம்பாறை பொலிஸா ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# பிரபல ஐஸ் போதைப் பொருள் வியாபாரி அரபா நகரில் கைது!

மட்டக்களப்பு, நவ. 05

ஓட்டமாவடி பிரதேசத்தில் வசிக் கும் பிரபல ஐஸ் போதைப்பொருள் வியாபாரி நேற்று முன் தினம் இரவு அரபா நகரில் வைத்து 16 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

28 வயதையுடையவர் இவர் ஓட்ட மாவடி பிரதேசத்தில் வசிக்கிறார்.

காகித ஆலை இராணுவ புலனாய் வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கதிரவெளி விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டார்.

போதைப்பொருளை விற்பனைக்கு கொண்டு சென்ற மோட்டார் சைக்கிள் மற்றும் போதைப்பொருள் விற்பனை செய்த ஒரு தொகைப்பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் நீண்ட காலமாக மிகவும் சூட்சுமான முறையில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, கொழும்பிலிருந்து மொத்தமாக போதைப் பொருளைக் கொண்டு வந்து விற்பனை செய்து வந் ததுள்ளதாக முதற்கட்ட விசாரணை யில் தெரிய வந்துள்ளது.

இவரை பல்வேறு தடவைகளில் கைது செய்ய முயற்சித்தும் சாதுரிய மாக தப்பித்து வந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது.

இவரின் பின்னணியில் மேலும் பல பெரும் புள்ளிகள் இருப்பதாகவும் தகவல் கசிந்துள்ளது.

அவர் மேலதிக விசாரணைக்காக வாழைச்சேனை பொலிஸில் ஒப்படைக் கப்பட்டுள்ளார். (அ)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேராளர் மாநாடு திங்களன்று

நிந்தவூர், நவ. 05

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 30 ஆவது பேராளர் மாநாடு எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை, புத்தளத்தில் நடைபெறவிருக்கின்றது.

கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலைமை யில், புத்தளம் கே.ஏ.பாய்ஸ் ஞாபகர்த்த மண்டபத்தில் மாநாடு நடைபெறும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலி ருந்தும் வருகை தரும் பேராளர்கள் உட்பட கட்சியின் உச்சபீட உறுப் பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாநாட்டில் கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீம் பேராளர் மாநாட்டுப் பேருரை யாற்றுவதுடன், கட்சியின் புதிய நிருவா கிகள் தெரிவும் பிரகடனப்படுத்தப்படும்.

இதேவேளை "மொட்டு" ஆட்சியின் போது (பொது ஜன பெரமுன) கட்சி யின் கட்டுப்பாட்டை மீறி 20 ஆவது அரசியலமைப்புத்திருத்தம் மற்றும் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவளித்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில், கட்சிப் போராளிகள் மத்தியில் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

கட்சிப்பதவிகளிலிருந்து இடை நிறுத் தப்பட்டு ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள மேற்படி மொட் டுக்கு முட்டுக் கொடுத்த கட்சிப் பாராளு மன்ற உறுப்பினர்களை இந்த பேராளர் மாநாட்டுக்கு அழைப்பதா, இல்லையா? என்பது தொடர்பிலேயே கருத்துப் பரி மாற்றங்கள் தற்சமயம் கட்சி வட்டாரங்க ளில் சர்ச்சை யாகக்கிளம்பியுள்ளன.

எனினும் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறும் கட்சியின் அரசியல் உச்ச பீடக் கூட்டத்திலேயே இந்த சர்ச்சைக் கான தீர்மானம் எடுக்கப்படுமென கட் சியின் தவிசாளர் ஏ.எல்.அப்துல் மஜீத் கருத்து தெரிவித்தார்.

கட்சியின் உப தலைவர் எச்.எம். எம்.ஹரீஸ் பொருளாளர் எம்.பைஸால் காசிம், தேசிய அமைப்பாளர் எம்.எஸ். தௌபீக் ஆகியோரின் பதவிகளே இடை நிறுத்தப்பட்டு, மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒழுக்காற்று நடவடிக் கைக்கு முகம் கொடுத்துள்ளனர்.

ஏற்கனவே கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அகமட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள் ளமையும் குறிப்பிடத்தக்கது (அ-06)

# மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுவதற்கு செயல்திட்டம்

அம்பாறை, நவ. 05

காரைதீவு பிரதேசத் தில் மாற்றுத் திறனாளிக ளுக்கு உதவும் செயற் திட்டத்தை காரைதீவு பிரதேச சபை முன்னெ டுத்து வருகின்றது.

இது தொடர்பான உயர் மட்ட கலந்துரை யாடல் காரைதீவு பிர தேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெய சிறில் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இக் கூட்டமானது ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் அனுசரணையில் அந்த நிறுவனத்தின் அதிகாரி கள்,பிரதேச சபை செய லாளர், உத்தியோகத்தர் கள், சமூக சேவை உத்தி யோகத்தர்,காரைதீவு பிரதேசத்திற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் சங்க தலைவர், செயலா ளர் மற்றும் மாற்றுத்திற னாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் மாற் றுத்திறனாளிகளுக்காக எதிர்காலத்தில் இவர்க ளிற்கான வாழ்வாதார உதவிகள், சுய தொழில் செய்வதற்கான உதவிகள் மற்றும் அவர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளிற்கும் உதவி வழங்குவதாகவும் அவர்களிற்கு தேவையான ஊன்றுகோல், சக்கர நாற் காலி என்பனவற்றினை முன்னய காலங்களில் பெற்றுக் கொடுத்திருக் கின்றோம். இனிவரும் காலங்களிலும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஏனைய நிறுவ னங்கள் மூலம் பெற்றுக் கொடுக்க முயற்சி மேற் கொள்வதாகவும் தவிசா ளர் உறுதியளித்தார். (அ)

# அகில இலங்கை சித்திரப் போட்டிக்கு சம்மாந்துறையிலிருந்து 3 சித்திரங்கள்

அம்பாறை, நவ. 05

அகில இலங்கை தேசிய மட்ட சித்திரப் போட் டிக்கு சம்மாந்துறை வலயத்தில் இருந்து மூன்று சித்தி ரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த மூன்று மாணவர்களை சம்மாந்துறை வல யக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர் கடந்த வியாழக்கிழமை நேரில் சென்று வாழ்த்தினார்.

சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலயத்தில் எம். எம்.மொகமட் அஸ்மல் எம்.ஆர்.எவ். சதீஹா சஹானி ஆகிய இரண்டு மாணவர்களும் தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் ஏ.ஆர்.நகீஷ் என்ற மாணவரும் தேசிய மட்டத்தில் கலந்து கொள்ள தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

தேசிய மட்டத்திற்கு தெரிவாகிய மாணவர்களை யும் மாகாண மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர் களையும் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர், பிரதி கல்வி பணிப்பாளர் ஏ.எல்.ஏ. மஜீட், உத விக்கல்வி பணிப்பாளர் யூ.எல். நியால், சம்மாந்துறை கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஏ.சபூர்தம்பி, சித்திரப் பாட ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல். அப்துல் முனாப் ஆகியோர் நேரில் சென்று வாழ்த்தினர். (அ)

## 61 வயதில் 87 திருமணம்!

### 88 ஆவது முறை முதல் மனைவியை கரம் பிடித்த கான்



ஜகார்த்தா, நவ. 05

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவாவில் உள்ள மஜலெங்காவைச் சேர்ந்த. 61 வயதான கான் இதுவரை 87 திருமணங்கள் செய்து உள்ளார். கான் தனது 14 வயதில் முதல் முறையாக திருமணம் செய்து கொண்டார்,

அவருடைய தற்போதைய மனைவி அவரைவிட இரண்டு வயது மூத்தவராவார், பலமுறை திருமணம் செய்துகொண்ட கானுக்கு 'பிளேபாய் கிங்' என்று செல்லப்பெயர் சூட்டப்பட்டது.

தற்போது கான் 88 ஆவது முறையாக திருமணம் செய்து உள்ளார். அதுவும் விவகாரத்து செய்த தனது முதல் மனைவியை மீண்டும் திருமணம் செய்து கொண்டுள்ளார்

இது குறித்து கான் தெரிவிக்கையில்,

எங்களுக்கிடையிலான காதல் இன்னும் வலுவாக உள்ளது. எனது முன்னாள் மனைவி திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் என்னை அணுகியபோது என்னால் மறுக்க முடியவில்லை.

நாங்கள் பிரிந்து நீண்ட நாட்களாகிவிட்டாலும், எங்களுக்கு இடையேயான காதல் இன்னும் வலுவாக உள்ளது. எங்களது திருமணம் ஒரு மாதமே நீடித்தது. அப்போது எனது மோசமான அணுகுமுறை காரணமாக, திருமணமான இரண்டு ஆண்டுகளுக் குப் பிறகு என் மனைவி விவாகரத்து கேட்டார். இந்த சம்பவம் என்னை கோபப்படுத்தியது, இதன் விளைவாக, பல பெண்களை திருமணம் செய்து கொண்டேன்.

ஆனால் பெண்களுக்கு நல்லதல்லாத விடயங்களைச் செய்ய நான் விரும்பவில்லை. நான் அவர்களின் உணர்வுகளுடன் விளையாட விரும்பவில்லை

ஒழுக்கக்கேடு செய்வதை விட, நான் திருமணம் செய்துகொள்வதே சிறந்தது" என்றும் அவர் கூறினார்.

இருப்பினும், அவரது 87 திருமணங்களில் அவருக்கு எத்தனை குழந்தைகள் உள்ளனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

கடந்த ஆண்டு இறந்த மிசோரமைச் சேர்ந்த 76 வயதான ஜியோனா சானா, 39 மனைவிகள் மற்றும் 94 குழந்தைகளைப் பெற்றுள்ளார் மற்றும் மிகப் பெரிய குடும்பத்திற்கு தலைமை தாங்கி உலக சாதனை படைத்துள்ளார். (அ)

# மக்களைத் தவறாக வழிநடத்தியதால் இம்ரான் கானை கொல்ல முயன்றேன்!

## துப்பாக்கிதாரி பரபரப்பு வாக்குமூலம்!





இஸ்லாமாபாத், நவ. 05

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியவரின் ஒப்புதல் வாக்குமூல வீடியோ வெளியாகியுள்ளது. கைது செய்யப்பட்ட பின்னர் அந்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையின்போது இந்த வீடியோ பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதில், முன்னாள் பிரதமர் இம்ரான் கானை சுட்டுக்கொல்லவே முயன்றதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

பாகிஸ்தானில் விரைவில் பொதுத்தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி, இம்ரான் கானின் பி.ரி.ஐ கட்சி நடத்தும் தொடர் பேரணி, வியாழன் அன்று குஜ்ரன் வாலா மாவட்டத்தின் வஜிராபாத் நகருக்குள் நுழைந்த போது, துப்பாக்கிச்சூடு இடம்பெற்றது.

இதில் ஒருவர் கொல்லப்பட்டார். இம்ரான் கான் உள்ளிட்ட 7 பேர் காயமடைந்தனர். இம்ரான் கானின் காலில் துப்பாக்கிச்சூட்டு காயம் ஏற்பட்டது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர், மக்களை தவறாக வழிநடத்தியதால் முன்னாள் பிரதமரைக் கொல்ல முயன்றதாக ஒப்புக் கொண்டார்.

"என்னால் அதைத் தாங்க முடியவில்லை. இம்ரான் கானைக் கொல்ல முயன்றேன். நான் முயற்சித்தேன். கானைக் கொல்ல என்னால் இயன்றவரை முயற்சித்தேன், கானை மட்டும் கொல்ல முயற்சித்தேன், வேறு யாரையும் கொல்லவில்லை," என்று துப்பாக்கிச் சூடு நடத்தியவர் கூறினார்.

"அவர்களின் ஒலி அமைப்பில் உரத்த இசையை இசைப்பதன் மூலம் அவர்கள் ஜஅசானின்ஸ புனிதத்தை மீறுகிறார்கள் என்று நான் நினைத்தேன். என் மனசாட்சியால் அதைக் கையாள முடியவில்லை, நான் நடவடிக்கை எடுத்தேன்" என்றார்.

இது தன்னிச்சையான செயலா அல்லது திட்டமிடப்பட்ட செயலா என்று கேட்டபோது, துப்பாக்கிச் சூடு நடத்தியவர் முதலில் இது "தன்னிச்சையான முடிவு" என்று கூறினார். பின்னர் "இன்று காலை அதை செய்ய முடிவு செய்தேன்" என்று கூறி னார்.

இருப்பினும், மூன்றாவது முறை குறிப்பிடும் போது, லாகூரிலிருந்து புறப்பட்டதிலிருந்து கானைச் சுடத் திட்டமிட்ட தாகக் கூறினார். "நான் அவரை விடமாட்டேன் என்று திட்டமிட்டேன்," என்று அவர் மேலும் கூறினார்.

அவரின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்று கேட்டபோது, யாரும் இல்லையென மறுத்தார்.

துப்பாக்கிதாரி பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு மேலதிக தடயங்களுக்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, சந்தேக நபரின் வாக்குமூலம் அடங்கிய வீடியோ கசிந்ததையடுத்து, சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் முழு ஊழியர்களையும் பணி இடைநீக்கம் செய்து, பஞ்சாப் முதல்வர் சவுத்ரி பெர்வைஸ் எலாஹி உத்தரவிட்டுள்ளார்.

இந்த வீடியோ கசிவு குறித்து விசாரணை நடத்தவும், பொறுப்பற்ற அதிகாரிகள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் மாகாண முதல்வர் உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் முழு ஊழியர்களின் கையடக்கத் தொலைபேசிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன, அந்த தொலைபேசிகளின் தடயவியல் தணிக்கை நடத்தப்படும் என்று முதல்வர் எலாஹி கூறினார். (அ)

# ஒழுங்கான வீஸா இன்றி பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வதிவிட உரிமை!

## பிரான்ஸ் உள்துறை அமைச்சு அறிவிப்பு



பாரிஸ், நவ. 05

புத்தாண்டில் பிரான்ஸ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்ற புதிய குடியேற்றம் தொடர்பான சட்டமூலத்தில் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு அவர்கள் புரிகின்ற பணியின் அடிப்படையில் விசேட வதிவிட உரிமை வழங்குகின்ற ஒரு திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் போதிய பணியாளர்கள் இல்லாது நெருக்கடியின் கீழ் இயங்கும் தொழில்துறைகளில் அல்லது மூடப்பட வேண்டிய நிலையில் உள்ள தொழில் துறைகளைப் பாதுகாப்பதற்காக அங்கு ஏற்கனவே உரிய வீஸா அனுமதிகள் இல்லாமல் ஒழுங்கற்ற விதத்தில் பணியாற்றிவருகின்ற வெளிநாட்டவர்களுக்காகப் புதிய வதிவிட அனுமதியை அறிமுகப்படுத்தும் யோசனை அதுவாகும்.

தற்சமயம் உணவகம் போன்ற சில துறைகளில் வீஸா இன்றி நீண்ட காலம் பணிபுரிவோர் தங்களது தொழிலின் அடிப்படையில் வதிவிட அனுமதி கோரி விண்ணப்பிக்கின்ற வாய்ப்பு உள்ளது. அதன் கீழ் குறைந்தது ஒரு வருட வதிவிட அனுமதி சில சந்தர்ப்பங்களைப் பொறுத்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.அதே போன்ற ஒரு திட்டத்தையே குடியேற்றிகள் சட்டத்துக்குள் சேர்க்கும் யோசனையை அரசு தயாரித்துள்ளது.

இந்த வதிவிட அனுமதி தொடர்பான விவரங்களை உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டாமன்னா தொழில் அமைச்சர் ஒலிவியே டுஸோப்ட் இருவரும் முன்னணிப் பத்திரிகை ஒன்றிடம் வெளியிட்டுள்ளனர். அந்தச் செய்தி வெளியான கையோடு தீவிர வலதுசாரித் தலைவர்களிடம் இருந்து திட்டத்துக்குக் கடுமையான எதிர்ப்புக் கிளம்பி உள்ளது.

அண்மையில் லோலா என்ற சிறுமி அல்ஜீரிய நாட்டைச் சேர்ந்த வதிவிட அனுமதி அற்ற யுவதி ஒருவரால் கொலை செய்யப்பட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்ட சம்பவத்தை அடுத்து வெளிநாட்டுக் குடியேறிகள் தொடர்பான விவாதங்கள் தேசிய அரசியலில் சூடு பிடித்துள்ளன. அந்தக் கட்டத்தில் அரசின் இந்த வதிவிட உரிமைத் திட்டம் ”எரியும் நெருப்பில் மேலும் எண்ணெய்” வார்த்திருக்கிறது.

தீவிர வலதுசாரி மரீன் லூ பென் மற்றும் வலதுசாரி கடுப்போக்குத் தலைவர்கள் இந்த வீஸா திட்டத்தைக் கடுமையாகச் சாடிக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

”இது ஒரு பெருமெடுப்பிலான வதிவிட வீஸா வழங்கும் திட்டம் அல்ல. வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிபுரிகின்ற துறைகளின் தேவை கருதித் தற்காலிகமாக வழங்குகின்ற குறுகிய கால வதிவிட அனுமதிதான். நாடு கடத்தப்படும் நிலையில் இருப்பவர்களுக்கு வழங்குகின்ற வதிவிட அனுமதி அல்ல” என்று அமைச்சர் டாமன்னா எதிர்க்கட்சிகளுக்குப் பதிலளித்திருக்கிறார். (அ)

# உக்ரைனில் 4.5 மில்லியன் மக்களுக்கு மின்சார தடை!

கீவ், நவ. 05

உக்ரைனில் 4.5 மில்லியன் மக்களுக்கு மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளதாக, உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

சமீபத்திய வாரங்களில், உக்ரைனிய மின் நிலையங்கள் மீது ரஷ்யா பெரிய அளவிலான ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியது.

போர்க்களத்தில் தொடர்ச்சியான வலிமிகுந்த தோல்விகளுக்குப் பிறகு, ரஷ்யா முன்னணியில் இருந்து நகரங்களில் மின்சார உள்கட்டமைப்பு மீது சமீபத்திய வாரங்களில் தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளது.

ஜனாதிபதி ஸெலென்ஸ்கியின் கூற்றுப்படி, கடந்த மாதத்தில், நாட்டின் மின் நிலையங்களில் மூன்றில் ஒரு பங்கு அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உக்ரைனிய அரசாங்கம், இதன் விளைவாக ஆற்றலைச் சிக்கனமாகப் பயன்படுத்த முயற்சிக்குமாறு மக்களை வலியுறுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. (அ)

இருபது - 20 உலகக் கிண்ணம்:

# அரையிறுதி சுற்றுக்கு நியூசிலாந்து அணி தகுதி!



அடிலெய்ட், நவ. 05

அயர்லாந்து அணியை 35 ஓட்டங்களால் வெற்றி கொண்டு முதல் அணியாக அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது நியூசிலாந்து அணி.

அவுஸ்திரேலியாவில் உலகக் கிண்ணப் போட்டிகள் நடக்கின்றன. இதில், நேற்று நடந்த போட்டியில் நியூசிலாந்து - அயர்லாந்து அணிகள் மோதின. அடிலெய்ட்டில் நடந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 185 ஓட்டங்களைக் குவித்தது.

இந்தப் போட்டியில் மிகப் பெரிய வெற்றியை ஈட்டவேண்டும் என்பதை அறிந்திருந்த நியூசிலாந்து, ஆரம்பம் முதல் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தது.

முதல் 3 ஓவர்களில் நிதானத்துடன் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த நியூசிலாந்து, படிப்படியாக 7 ஓட்டங்களிலிருந்து 9 ஓட்டங்கள் வரை உயர்த்தியது.

பின் அலன் (32), டெவன் கொன்வே (28) ஆகிய இருவரும் 35 பந்துகளில் 52 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தினர். அலன் ஆட்டமிழந்த பின்னர் அணித் தலைவர் கேன் வில்லியம்ஸனுடன் 2ஆவது விக்கெட்டில் 44 ஓட்டங்களை கொன்வே பகிர்ந்தார்.

கொன்வே ஆட்டமிழந்தமையைத் தொடர்ந்து துடுப்பாட்டத்தில் அசத்துவார் என எதிர்பார்க்கப்பட்ட கிளென் பிலிப்ஸ் 17 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். தொடர்ந்து கேன் வில்லியம்ஸனும் டெரில் மிற்செலும் 4ஆவது விக்கெட்டில் 31 பந்துகளில் 60 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

மொத்த எண்ணிக்கை 174 ஓட்டங்களாக இருந்தபோது 19ஆவது ஓவரின் 2ஆவது பந்தில் அணித் தலைவர் கேன் வில்லியம்ஸனை கெரத் டிலேனி எடுத்த பிடி மூலம் ஆட்டமிழக்கச் செய்த லிட்டில், அடுத்த 2 பந்துகளில் ஜேம்ஸ் நீஷம், மிற்செல் சென்ட்னர் ஆகிய இருவரையும் எல். பி. டபிள்யூ. முறையில் களம் விட்டு வெளியேறச் செய்து ஹட்-ட்ரிக்கை பதிவு செய்தார்.

இந்த வருட உலகக் கிண்ணப் போட்டியில் பதிவான இரண்டாவது ஹட் - ட்ரிக் இதுவாகும்.

இருபது 20 உலகக் கிண்ணப் போட்டியில் பிறெட் லீ, கேம்பர், வனிந்து ஹசரங்க, கெகிசோ ரபாடா, கார்த்திக் மெய்யப்பன், ஜொஷ் லிட்ல் ஆகியோரே ஹட் - ட்ரிக் பதிவு செய்துள்ளனர்.

ஜொஷ் லிட்ல் ஹெட் - ட்ரிக்கைப் பதிவு செய்த தால் அதிர்ச்சி அடைந்த நியூசிலாந்து ஒருவாறு ஓட்ட வேகத்தை சிறப்பாக எட்டியது. கேன் வில்லியம்ஸன் 35 பந்துகளை எதிர்கொண்டு 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 61 ஓட்டங்களைப் பெற்றார்.

டெரில் மிற்செல் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழக் காதிருந்தார்.

அயர்லாந்தின் பந்துவீச்சில் ஜொஷ் லிட்ல் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கெரத் டிலேனி 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்து உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேறியது.

அணித் தலைவர் அண்டி பெல்பேர்னி (37), போல் ஸ்டேர்லிங் (30) ஆகிய இருவரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 49 பந்துகளில் 68 ஓட்டங்களை எடுத்தனர்.

ஆனால், அதன் பின்னர் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்த அயர்லாந்து வீழ்ச்சியிலிருந்து மீண்டெழ முடியாமல்போனது.

9 ஓவர்கள் நிறைவில் 70 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து மிகச் சிறந்த நிலையில் இருந்த அயர்லாந்து 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 8 விக்கெட்களை இழந்து தோல்வியைத் தழுவியது.

மத்திய வரிசையில் ஜோர்ஜ் டொக்ரெல் (23) மாத்திரமே 20 ஓட்டங்களுக்கு மேல் பெற்றார்.

நியூசிலாந்து பந்துவீச்சில் லொக்கி பெர்குசன் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மிற்செல் சென்ட்னர் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் டிம் சௌதி 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் இஷ் சோதி 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



## ரென்னிஸ் சம்பியன்ஷிப்; மரியா சக்காரி வெற்றி!

போர்த்வொர்த், நவ. 05

ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் கிரீஸ் நாட்டு வீராங்கனை மரியா சக்காரி இரண்டாவது வெற்றியைப் பெற்றார்.

முதல்நிலை-8 வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்றுள்ள டபிள்யூ. ரி. ஏ. இறுதி சுற்று எனப்படும் பெண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி அமெரிக்காவின் போர்த் வொர்த் நகரில் நடக்கிறது.

இதில் வீராங்கனைகள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டு இருக்கின்றனர். ஒவ்வொரு வீராங்கனையும் தங்கள் பிரிவில் உள்ள மற்றவர்களுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். றொபின் லீக் முடிவில் இரண்டு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

இதில் "நான்சி ரிச்சே" பிரிவில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் கிரீஸ் நாட்டு வீராங்கனை மரியா சக்காரி 6-2, 6-4 என்ற நேர்செற்றில் சபலென்காவை (பெலாரஸ்) தோற்கடித்து தொடர்ந்து 2ஆவது வெற்றியை பெற்றார்.

இருபது - உலகக் கிண்ணம்

# தென்னாபிரிக்காவை வீழ்த்தியது பாகிஸ்தான்!

சிட்னி, நவ. 05

இருபது - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் 36 ஆவது போட்டியில் பாகிஸ்தான் 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் (டக்வேர்த் - லூயிஸ் முறையில்) தென்னாபிரிக்காவை வென்றது.

இந்த வெற்றியின் மூலம் புள்ளிகள் பட்டியலில் 3ஆவது இடத்துக்கு முன்னேறியதுடன், அரையிறுதிக்கான பந்தயத்தில் தன்னை தக்கவைத்துள்ளது பாகிஸ்தான். தோல்வி கண்டாலும் மாற்றமின்றி 2ஆவது இடத்தில் நீடிக்கிறது தென்னாபிரிக்கா.

நேற்று முன்தினம் நடந்த இந்தப் போட்டியில் முதலில் பாகிஸ்தான் 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 185 ஓட்டங்கள் சேர்த்தது. அடுத்து தென்னாபிரிக்கா இனிங்ஸை மழை பாதிக்க டக்வேர்த் - லூயிஸ் முறையில் அந்த அணி 14 ஓவர்களில் 142 ஓட்டங்கள் அடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அத்தனை ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 108 ஓட்டங்களையே எட்டியது தென்னாபிரிக்கா.

துடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் பாகிஸ்தானுக்கு பலம் சேர்த்த ஷதாப் கான் ஆட்டநாயகன் ஆனார்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்று துடுப்



பெடுத்தாடிய பாகிஸ்தான் முதலில் தடுமாற, நடுவரிசையில் வந்த இப்திகார் அகமது, கீழ்வரிசையில் புகுந்த ஷதாப் கான் அணியைத் தூக்கி நிறுத்தினர். அதிரடியாக ஷதாப் கான் 22 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 52 ஓட்டங்கள் விளாச, அகமது 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 51 ஓட்டங்கள் அடித்தார்.

முகமது ஹாரிஸ் 28, முகமது நவாஸ் 28 ஓட்டங்கள் சேர்க்க, இதர விக்கெட்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தன. தென்னாபிரிக்க பந்துவீச்சில் அன்ரிஜ் நோர்ட்ஜே 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

பின்னர் தென்னாபிரிக்கா துடுப்பெடுத்தாடியபோது, 9 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 69 ஓட்டங்கள் சேர்த்திருந்த நிலையில், மழையால் ஆட்டம் தடைப்பட்டது. மீண்டும் தொடர்ந்த ஆட்டத்தில் 'டக்வேர்த் லூயிஸ்' முறையில் தென்னாபிரிக்கா 14 ஓவர்களில் 142 ஓட்டங்கள் அடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

எனினும், எஞ்சியிருக்கும் 5 ஓவர்களில் 73 ஓட்டங்களை நோக்கி ஆடிய அந்த அணியின் விக்கெட்கள் பெரிதாக ஓட்டங்கள் சேர்க்காமலேயே அடுத்தடுத்து சரிந்தன. அணித்தலைவர் தம்பா பவுமா 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 36 ஓட்டங்கள் சேர்த்ததே அதிகபட்சமாக இருக்க, அய்டன் மார்க்ரம் 20, டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 18 ஓட்டங்களுக்கு நடையைக் கட்டினர்.

ஓவர்கள் முடிவில் லுங்கி நிகிடி 4, டப்ரைஸ் ஷம்ஸி ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பாகிஸ்தானில் அதிகபட்சமாக ஷஹீன் அப்ரிடி 3, ஷதாப் கான் 2 விக்கெட்கள் சாய்த்தனர்.

# காணாமலாக்கப்பட்டோர் விசாரணை அடுத்த வருட இறுதியில் முடிவுறும்

## நீதியமைச்சர் விஜயதாஸ தகவல்

கொழும்பு, நவ.05

**காணாமல்போனோர் தொடர்பான அனைத்து விசாரணைகளும் அடுத்த வருட இறுதியில் முடிக்கப்படும் என நீதி மற்றும் சிறைச்சாலை விவகாரங்கள் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குடன் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நீதியமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது, இலங்கையில் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக 21 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதையும் சட்ட முறைமையை புதுப்பிப்பதற்கு பல புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை குறித்தும் தூதுவர் பாராட்டினார்.

அத்தோடு, வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட நடமாடும் சேவைகள் உள்ளிட்ட நலன்புரித் திட்டங்களுக்கும் தூதுவர் தமது பாராட்டுகளை தெரிவித்தார்.



இந்த நிலையிலேயே, காணாமல்போனவர்கள் தொடர்பான அனைத்து விசாரணைகளும் அடுத்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் முடிக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்துள்ளார். (அ)

# 14ஆம் திகதிக்கு முன் புதிய அமைச்சரவை

## ஜனாதிபதி ரணில் திட்டம்

கொழும்பு, நவ. 05

எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் புதிய அமைச்சரவையை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என அரசியல் வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர், கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் இறுதியாக இருந்த அமைச்சரவையை சிறிய மாற்றங்களுடன் தற்காலிகமாக நியமித்தார்.

நிரந்தர அமைச்சரவையை நியமிக்க திகதிகள் நிர்ணயிக்கப்பட்ட போதிலும் பொதுஜன பெரமுனவுடன் இணக்கத்தை ஏற்படுத்த முடியாத காரணத்தினால், நிரந்தர அமைச்சரவையை நியமிக்க முடியாமல் போனது.

குறிப்பாக பொதுஜன பெரமுன தரப்பில் அமைச்சு பதவிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்த்தன, மகிந்தானந்த அளுத்கமகே, நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுவதை ஜனாதிபதி முற்றாக நிராகரித்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதியிடம் சில முறை மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் ஜனாதிபதி தனது தீர்மானத்தை மாற்றிக்கொள்ளவில்லை.

இறுதியாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு இணங்கியதாக கூறப்படுகிறது.

காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்துக்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த வார இறுதியில் எகிப்துக்கு புறப்பட்டுச் செல்ல உள்ளார். அங்கிருந்து நாடு திரும்பியதும் புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# பொருளாதார அழுத்தத்தால் குறைந்தது மது பாவனை

கொழும்பு, நவ. 05

உலகில் மது அருந்துவது தொடர்பான தரவரிசையில் இலங்கை 79ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொருளாதார அழுத்தம் காரணமாக நாட்டில் மதுப் பாவனை வேகமாக குறைந்துள்ளதாக கலால் ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் அண்மைக்காலமாக மதுப் பாவனை மிகவும் குறைந்துள்ளது. மதுபானத்தின் விலை அதிகரிப்பு மற்றும் வருமானம் குறைவடைந்தமையே இதில் பிரதான மாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என அவர் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைக்காக நிதி சேகரிப்பு திட்டத்தை ஆரம்பித்தது ஐ.நா.

## உதவி வழங்குமாறு உலக மக்களிடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 05

இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் நோக்கில் ‘இலங்கையை மீளக்கட்டியெழுப்பல்’ என்ற மகுடத்தில் நிதி சேகரிப்புத்தளமொன்றை ஆரம்பித்திருக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச்செயற்திட்டம், அத்தளத்திற்குத் தம்மால் இயன்ற நிதியை வழங்குவதன் ஊடாக இலங்கை மக்களுக்கு உதவமுன்வருமாறு உலக மக்களிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இது குறித்துத் தெளிவுபடுத்தி ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச்செயற்திட்டத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்து சமுத்திரத்தின் முத்தாக அறியப்படும் இலங்கை இப்போது மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது.

கடந்த 1948 ஆம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை முகங்கொடுத்திருக்கும் மிகப்பாரிய நெருக்கடி இதுவாகும்.

இதன்விளைவாக பல மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன், மொத்த சனத்தொகையில் சுமார் 5.7 மில்லியன் மக்கள் உடனடி மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்ற துரதிஷ்டவசமான நிலையில் இருக்கின்றனர். அதுமாத்திரமன்றி சுமார் 6.3 மில்லியன் மக்கள் அவர்களின் அடுத்தவேளை உணவு எங்கிருந்து கிடைக்கப்பெறும் என்று தெரியாத நிலையில் உள்ளனர்.

எனவே இந்நிலவரம் தொடர்ச்சியாக மோசமடைந்துவரும் பின்னணியில், நாம் இலங்கை மக்களுக்கு உதவுவதற்கான ஏனைய முயற்சிகளில் ஒன்றாக நிதி சேகரிப்பு பிரசாரமொன்றை ஆரம்பித்திருக்கின்றோம். இதனூடாக தற்போது இலங்கை மக்கள் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியின் தீவிரத்தன்மையைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

உணவு மற்றும் சுகாதாரம் ஆகிய இரண்டும் இப்பொருளாதார நெருக்கடியினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட இரு துறைகளாகக் காணப்படுகின்றன. நிரம்பல் சங்கிலி சீர்குலைந்திருப்பதுடன் குறிப்பிட்ட சில அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மருந்துப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

அதன்விளைவாக நாடளாவிய ரீதியில் வழமையான சில சத்திரசிகிச்சைகளைத் தாமதப்படுத்தவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இவை மக்களை வெகுவாகப் பாதித்திருக்கும் பின்னணியில், இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு சர்வதேச உதவிகள் அவசியமாகின்றன.

அதன்படி இலங்கையர்களுக்கு உதவுவதற்கு எமக்கு உங்களுடைய உதவி தேவைப்படுகின்றது.

இலங்கையில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பின்தங்கிய தரப்பினருக்கு அவசியமான உதவிகளை வழங்குவதில் நீங்களும் பங்களிப்புச்செய்யமுடியும். அதன்படி ‘இலங்கையை மீளக்கட்டியெழுப்பல்’ என்ற மகுடத்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதி சேகரிப்புத் தளத்திற்கு உங்களால் இயன்ற நிதியுதவியை வழங்கலாம்.

வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு அவசியமான உதவிகளை உலகின் பலதரப்பட்ட நாடுகளைச்சேர்ந்த மக்களிடமிருந்து திரட்டிக்கொள்ளும் நோக்கிலேயே இந் நிதி சேகரிப்புத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனூடாகத் திரட்டப்படும் நிதியானது இலங்கையில் தட்டுப்பாடு நிலவும் அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும், விவசாயிகளுக்கு அவசியமான விதைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், குடும்பங்களிடையே வீட்டுத்தோட்ட செயன்முறையை ஊக்குவிப்பதற்கு அவசியமான உபகரணங்களை வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ரஷ்ய நாட்டு பெண்ணை தாக்கிய இளைஞர் கைது

கொழும்பு, நவ. 05

கண்டி ஹந்தான பகுதியில் ரஷ்ய நாட்டு பெண்ணை தாக்கிய குற்றச்சாட்டில் ரஷ்ய நாட்டு இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் , படுகாயமடைந்த பெண்ணை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

குறித்த சம்பவம் கண்டி ஹந்தான பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இருவருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தாக்குதலுக்கு உள்ளான 32 வயதான நடீஸ்டா என்ற இளம் பெண் சிகிச்சைக்காக பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி இலங்கைக்கு வந்துள்ள நிலையில் அவரது விஸா அடுத்த ஆண்டு ஜனவரி 31ஆம் திகதியுடன் காலாவதியாகிவிடும் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் கடவுச்சீட்டு இல்லை எனவும், அவர் நாட்டுக்கு வந்த திகதி அல்லது விஸா காலாவதியான திகதி போன்றவற்றைக் கண்டறிய முடியாததால் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மேலதிக எரிபொருள் பெற 7,675 ஓட்டோக்கள் பதிவு!

கொழும்பு, நவ. 05

மேல் மாகாணத்தில் முச்சக்கர வண்டி ஒழுங்குப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் மேலதிகமாக ஐந்து லீற்றர் எரிபொருள் ஒதுக்கத்தை பெற்றுக் கொள்வதற்காக இதுவரை 7,675 ஓட்டோக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த முதலாம் திகதி எதிர்வரும் ஆறாம் திகதி வரை இந்த பதிவு நடவடிக்கை இடம்பெறவுள்ளதாக மேல்மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் ஓட்டோ பணியகத்தின் பிரதானி ஜீவிந்த கீர்த்திரத்ன தெரிவித்தார்.

இதுவரை 5 லீற்றர் வழங்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கம் இந்த பதிவு நடவடிக்கை ஊடாக 10 லீற்றராக அதிகரிக்கப்படவுள்ளது.

தற்போது மேல் மாகாணத்தில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டுள்ள குறித்த வேலைத்திட்டம் விரைவில் ஏனைய மாகாணங்களுக்கு விஷ்தரிக்கப்படவுள்ளது. (அ)

## நீரிழிவு...

பெற்றுள்ளனர் - என்று நீரிழிவு அகஞ் சுரக்கும் தொகுதி விசேட மருத்துவ நிபுணர் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் நீரிழிவு நோய் தாக்கம் குறித்து அவர் மேலும் கூறுகையில்,

நீரிழிவு நோயின் தாக்கம் தொடர்பில் மிக அண்மைய தரவுகளின்படி கொழும்பில் - மேல் மாகாணத்தில் 30 வீதமானவர்களுக்கு இந்த நோய் தாக்கம் உள்ளது. யாழ்ப்பாணத்தில் 15 சத வீதமானவர்களுக்கு நீரிழிவு நோய்க்கு இலக்காகியுள்ளனர். இந்த நோய் தொடர்பான ஆய்வுகளை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக - கோவிட் தொற்றுக் காலப் பகுதியில் 20 - 40 வயதுக்கு உட்பட்டவர்கள் மத்தியில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டில் இதுவரை 3000இற்கும் மேற்பட்டவர்கள் புதிய நோயாளர்களாக பதிவாகியுள்ளனர். நீரிழிவு நோயின் தாக்கம் சிறிதுசிறிதாக அதிகரிக்கிறது.

நவம்பர் மாதம் உலகளாவிய ரீதியில் நீரிழிவு விழிப்புணர்வு வாரமாக கொண்டாடப்படுகின்றது. இதை யொட்டி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல விழிப்புணர்வு செயல்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. பாடசாலை, கல்லூரி மாணவர்கள் மத்தியில் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமானது. ஏனெனில், இளையோர் மத்தியிலேயே நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்து செல்கிறது. இதற்கு முக்கிய காரணம் வாழ்க்கை நடைமுறையில் ஏற்பட்ட மாற்றம். குறிப்பாக, தவறான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி அற்ற வாழ்க்கை முறை, மன அழுத்தம், நித்திரை குறைவு, போன்ற காரணங்கள் நீரிழிவு ஏற்பட காரணமாகின்றன. நீரிழிவு நோய் ஏற்படும்போதான அறிகுறிகளை அடையாளம் கண்டால் உடன் உரிய சிகிச்சை பெற்றால் பாரதூரமான தாக்கத்திலிருந்து தப்ப முடியும்.

வடக்கு மக்கள் நீரிழிவு நோய் தொடர்பில் மிகவும் விழிப்பாக இருப்பது அவசியம் - என்றார். (ஐ-03)

## குரங்கு அம்மை...

பது தெரியவந்துள்ளது.

மருத்துவர்களின் சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த நபர் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் ஆராய்ச்சிப் பிரிவுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு நடத்தப்பட்ட சோதனைகளின்படி, குரங்கு காய்ச்சலுக்கான குறிப்பிட்ட மரபணுக்களை அடையாளம் காண முடிந்ததாகவும் இதனையடுத்து, அவர் தற்போது ஆதார மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார் என்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## மக்களிடம்...

குறைந்தளவு அரசியல் அறிவுடையவர்களாக உள்ளனர். அரசியல் அறிவை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் அவசியம் - என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் மத்தியில் மிகவும் குறைந்தளவு அரசியல் விழிப்புணர்வு காணப்படுவதால் மோசடி சந்தேகநபர் திலினி பிரியமாலி போன்றவர்கூட நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

நாட்டின் அரசியல் அறிவு அல்லது விழிப்புணபுர்வு என்பது மிகவும் மோசமானதாக காணப்படுகின்றது. இதனை உயர்த்துவதற்கு அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொருத்தமான அரசமைப்பு மாற்றங்களை கொண்டுவருவதற்கான பொருத்தமான நபர்களை மக்கள் தெரிவு செய்வதற்கு மக்கள் அரசியல் விழிப்புணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும். இதனை மாற்றாமல் எங்களால் ஊழல்மோசடி நிறைந்த அரசியல் முறைமையையோ அல்லது சமூகத்தையோ தெரிவு செய்ய முடியாது.

மொடல்கள், நடிகர், நடிகைகள், பாடகர்கள் விளையாட்டு வீரர்கள் போன்ற பிரபலமானவர்கள் தேர்தலில் போட்டியிட்டால் மக்கள் அவர்களுக்கு அதிக வாக்குகளை வழங்குகின்றனர். சிறைச்சாலையிலிருந்து விடுதலையான நபர் பின்னர் தேர்தலில் போட்டியிட்டால் அவர் அதிக வாக்குகளை பெறும் வாய்ப்புள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## விமல் - டலஸ் ...

ளாக்கி, நாட்டின் ஜனநாயகத்தை அச்சுறுத்தல் நிலைக்கு கொண்டு செல்லும் வகையில் தான்தோன்றித்தனமாக அரசாங்கம் செயல்படுகிறது. ஜனநாயகத்துக்கு எதிரான அரசாங்கத்தில் அடக்குமுறையை இல்லாதொழிக்க பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

அரசாங்கத்தின் தன்னிச்சையான செயல்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபடுவது அவசியமானதாகும். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என்று கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

இந்தப் பேச்சில், சுதந்திர மக்கள் காங்கிரஸ் சார்பில், டலஸ் அழகபெரும, ஜீ. எல். பீரிஸ், டிலான் பெரேரா, நாலக கொடஹேவா, சரித ஹேரத் ஆகியோரும் மேலவை இலங்கை கூட்டணி சார்பில் விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, அத்துரலியே ரத்ன தேரர், உதய கம்மன்பில ஆகியோரும் பங்கேற்றனர். (ஐ)

## இரட்டை...

மன்ற உறுப்பினர்களுக்கு எதிரான நடவடிக்கை தொடர்பாக அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசமைப்பின் 22ஆம் திருத்த சட்டமூலம் கடந்த மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன் பிரகாரம் இரட்டை குடியுரிமை உள்ளவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தொடர்ந்து செயல்பட முடியாது.

என்றாலும் தற்போதைய பாராளுமன்றத்தில் இரட்டை குடியுரிமை உள்ளவர்கள் யாரேனும் இருந்தால் அவர்களாகவே அதுதொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும். அவ்வாறில்லாமல் இரட்டை குடியுரிமை உள்ளவர்களுக்கு எதிராக பாராளுமன்றம் ஊடாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

அந்த அதிகாரம் எமக்கு இல்லை. ஆனால், இதுதொடர்பாக நீதிமன்றம் சென்று தற்போதுள்ள பாராளுமன்றத்தில் யாருக்காகவது இரட்டை குடியுரிமை இருப்பது தொடர்பில் உறுதிப்படுத்தி, அது தொடர்பான நீதிமன்ற தீர்ப்பு பெறப்படுமானால். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியும்.

அதனால் ஒருவரை ஒருவர் விமர்சிக்காமல் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாருக்காவது இரட்டை குடியுரிமை இருக்குமானால், அவர்கள் அதுதொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதே கௌரவமான செயல் - என்றார். (ஐ)

# யாழில் டெங்கால் 2774 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 05

யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டில் மட்டும் 2,774 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 8 இறப்புகள் பதிவாகியுள்ளன என்று யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் செய்தியாளர்களை சந்தித்தபோதே இவற்றைத் தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொடர்ந்து டெங்கு நோய் பரவல் அதிகரித்து வருகிறது.

கடந்த 2020ஆம் ஆண்டில் 2,530 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். 2021இல் 301 நோயாளர்களும் இனங்காணப்பட்டனர். இந்த ஆண்டில் இதுவரை 2774 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாங்கள் பொது மக்களை கேட்டுக் கொள்வது யாதெனில் கட்டுப்படுத்தி எங்களுக்கு ஒத்துழைப்பு தாருங்கள் - என்றார். (ஐ)

# நாணய நிதியத்தின் கடன் இந்த ஆண்டே கிடைக்கும்

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, நவ. 05

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியைப் பெறுவதற்கான செயல்முறை இறுதி கட்டத்தில் உள்ளதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் குழுவின் அனுமதி கிடைக்கும் என நம்புவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற கடன் மறுசீரமைப்பு கலந்துரையாடலில் அனைத்து முக்கிய உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களும் பங்கேற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொடர்ச்சியான மழையால் தென்மராட்சியில் பயிர் அழிவு

யாழ்ப்பாணம், நவ. 05

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக தென்மராட்சி தெற்கு பிரதேசத்தில் பல ஏக்கர்களில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை வெள்ளத்தால் அழிவடைந்துள்ளது என நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சி தெற்கு பிரதேசத்தின் அறுகுவெளி, தனங்களப்பு, மறவன் புலவு, கோவிலாக்கண்டி போன்ற இடங்களிலேயே இந்த அழிவு இடம்பெற்றுள்ளது.

இந்த வருடம் போதியளவு உரங்கள் கிடைக்கப்பெற்றன. ஆயினும் இயற்கையின் சீற்றத்தால் எமது பயிர்கள் அழிவடைந்துள்ளன

சாவகச்சேரியிலிருந்து தனங்களப்பு செல்லும் வீதியின் இரண்டாவது கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வெள்ள நீர் வழிந்தோடும் மதகு வீதி புனரமைப்பின்போது மூடப்பட்டமையாலேயே மழைநீர் வழிந்தோட முடியாமல் தேங்கி பயிர்கள் அழிவடைந்துள்ளன என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டினர்.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம்செலுத்தி எமக்கு இழப்பீடு பெற்றுத்தர வழிவகை செய்யவேண்டும் என்றும் அவர்கள் கோரினர். (ஐ)

## நிறுத்தப்பட்டது...

திபதி இந்த முடிவை எடுத்துள்ளார்.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தை எதிர்வரும் 14ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மோப்ப நாயின்...

தனர்.

வவுனியா - நெளுக்குளம் சந்தியில் இன்று காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணிவரை இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக வடக்கில் - வவுனியாவில் போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் என்பன அதிகரித்துள்ளன. இவற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் நெளுக்குளம் பொலிஸார் மோப்ப நாயின் துணையுடன் வீதியால் சென்ற பஸ்கள், சொகுசு வாகனங்கள் என்பவற்றை மறித்துச் சோதனையிட்டனர். அத்துடன், சந்தேகத்துக்கிடமான இடங்கள் மற்றும் நபர்களையும் சோதனைக்கு உட்படுத்தினர். (ஐ)

## சீனாவுடன்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உரையில்,

சீனாவின் சந்தையில் நுழைய வளர்ந்து வரும் நாடுகளுக்கு சீனா புதுமையான கட்டத்தை வழங்கியுள்ளது. சீனா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுக்கள் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு எமது பொருளாதார உறவுகளை மேலும் மேம்படுத்தும் - என்றார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்துக்கு முன்னதாக கடன் வழங்கிய நாடுகளுடன் இலங்கை கடன் மறுசீரமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

இலங்கைக்கு அதிக கடன் வழங்கிய நாடுகளில் சீனா பிரதான இடம் வகிக்கிறது. 51 வீதமான கடன்களை சீனாவே வழங்கியுள்ளது. கடனை மறுசீரமைப்பதானால் முன்னர் இந்தியாவுக்கு வழங்கப்பட்டது போன்று சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு சீனா வலியுறுத்தியதாக தகவல்கள் வெளியாகின. இந்நிலையில், ஜனாதிபதியின் உரை அதற்கு சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளதாகப் பார்க்கப்படுகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நாணய நிதியத்திடம் எதிர்பார்த்த கடனை இவ்வருடம் பெற முடியாது

## இந்திய ஊடகங்கள் தகவல்

கொழும்பு, நவ. 05

**சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கை எதிர்பார்த்த கடன் தொகையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் பெற்றுக்கொள்ள முடியாது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

இது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை மேலும் குழப்பும் என பொருளாதார நிபுணர்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதங்களை சீனா தொடங்காததே இந்த கடன் தொகையை பெற முடியாமல் போனதற்கு முக்கிய காரணம் என்று அந்தச் செய்தியில் கூறப்படுகிறது.

இதன் காரணமாக அடுத்த மாதம் 2.9 பில்லியன் டொலர்களை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்ற முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த பின்னணியில், உரிய கடன் தொகையைப் பெற அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை காத்திருக்க வேண்டும் என்றும் அந்தச் செய்தியில் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் நாட்டில் கடன் வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் ஜப்பானும் இந்தியாவும் ஏற்கனவே கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதங்களை ஆரம்பித்துள்ளன. (அ)

# ரஷ்ய போர்க்கப்பல்கள் இலங்கை கடற்பரப்பில்!



கொழும்பு, நவ. 05

இரண்டு ரஷ்ய போர்க்கப்பல்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழைந்துள்ளன.

'வர்யாக்' ஏவுகணை கப்பல், அட்மிரல் டிரிபுட்ஸ் நீர்மூழ்கி எதிர்ப்பு கப்பல் மற்றும் 'போரிஸ் புடோமா' டேங்கர் தலைமையிலான பசிபிக் கடற்படையின் ஒரு பிரிவு பசிபிக் கடற்படையின் தெற்கே இலங்கைக்கான பொறுப்பு வலயத்திற்குள் நுழைந்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த பிரிவினர் மத்தியதரைக் கடலில் இருந்து விளாடிவோஸ்டோக்கில் அமைந்துள்ள தங்கள் தளத்திற்கு கடலுக்கு அப்பாற்பட்ட கடல் வலயத்தில் செயல்பட்ட பின்னர் மீண்டும் நிலைநிறுத்தப்படுவதாக தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல்கள் தற்போது இந்தியப் பெருங்கடலைக் கடந்து கிழக்கு ரஷ்யாவை நோக்கிச் செல்கின்றன. டிசெம்பரில் 2021 இல் இந்த பிரிவு அதன் தளத்திலிருந்து புறப்பட்டது. (அ)

# தொடரும் எரிபொருள் தட்டுப்பாடு

கொழும்பு, நவ. 05

நாட்டில் பரவலாக நிலவுகின்ற எரிபொருளுக்கான தட்டுப்பாடு இன்னும் ஒரு வாரத்துக்கு தொடரும் என்று எரிபொருள் விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் மாலையுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 80 சதவீதமான எரிபொருள் தீர்ந்துவிட்டது.

ஆனால் குறித்த நிலையங்களுக்கு எரிபொருளை மீள்நிரப்ப முறையான நடவடிக்கைகளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எடுக்கவில்லை என்று எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத் தலைவர் குசும் சதநாயக்க தெரிவித்துள்ளார். (அ)

# நகைக் கடையில் சங்கிலி திருடிய கள்வனை ஒரு மணி நேரத்தில் கைது செய்த பொலிஸார்

யாழ்ப்பாணம், நவ. 05

சாவகச்சேரி நகரப் பகுதியில் அமைந்துள்ள நகைக் கடை ஒன்றில் சங்கிலியைத் திருடிக் கொண்டு தப்பிய நபர் சாவகச்சேரி பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை காரணமாக ஒரு மணி நேரத்தினுள் பஸ் ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை மதியம் சாவகச்சேரி நகர் பகுதியில் அமைந்துள்ள நகைக்கடைக்கு இளைஞன் ஒருவர் நகை கொள்வனவு செய்வது போல சென்றுள்ளார்.

அதன்போது நகைக்கடையில் காட்சிப்படுத்தப்பட்ட இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான ஒன்றரைப் பவுண் சங்கிலியை திருடிக்கொண்டு கடையை விட்டு தப்பித்துள்ளார்.

இது தொடர்பாக நகைக் கடை உரிமையாளர் உடனடியாக சாவகச்சேரி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதுடன் கடையில் நின்ற உதவியாளரை திருடனைப் பின்தொடருமாறு அனுப்பி வைத்திருந்தார்.

இந்நிலையில் வவுனியா பஸ்ஸில் ஏறிய திருடன் தப்பிச் சென்ற பஸ்ஸை மறித்து பொலிஸார் திருடனை கைது செய்தனர். (அ)

# குரங்குக் காய்ச்சல் பரவுவதை தடுக்க நடவடிக்கை வேண்டும்

## வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, நவ. 05

இலங்கையில் குரங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்க விமான நிலையங்கள் மற்றும் ஏனைய இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட ஒருவரின் காயங்களில் இருந்து வெளியேறும் சுரப்புகளை நேரடியாக தொடுவதன் மூலம் மற்றுமொருவருக்கு தொற்று ஏற்படலாம் எனச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

குரங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் நாட்டில் இனங்காணப்பட்டமை குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த காய்ச்சலின் சிறப்பு அம்சம் என்னவென்றால், உங்களுக்கு புண்கள் மற்றும் சொறி ஏற்படும்.

மேலும்,உங்கள் ஆசனவாயைச் சுற்றி உங்கள் பிறப்புறுப்புகள் காயமடைந்தால், உடனடியாக மருத்துவ உதவியை நாடுங்கள்.

இது சம்பந்தமாக உறுதியான உறுதிப்படுத்தல் செய்து, நோய் முழுமையாக குணமாகும் வரை பாலுறவு நடவடிக்கைகளில் இருந்து விலகி இருங்கள். இது உலகம் முழுவதும் பரிந்துரைக்கப்படுகிறது.

இந்த நோயின் சிறப்பு என்னவென்றால், 80 வீதத்துக்கும் அதிகமான நோயாளிகள் தாங்களாகவே குணமடைகிறார்கள்.

இந்த நோயைக் கட்டுப்படுத்த நாடு என்ன நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை தொழில்நுட்பக் குழு அறிவிக்கும் வரை மக்கள் இந்த விடயத்தில் தேவையற்ற பீதியின்றி இருக்கவும் - என்றார்.

இதேவேளை, குரங்குக் காய்ச்சல் ஒரு கடுமையான கொடிய நோயல்ல என்றும் ஆனால் அது பாதிக்கப்பட்ட நபரின் திரவங்கள் மற்றும் சுவாசத் துளிகள் மூலம் மற்றவருக்கு இலகுவாகப் பரவக்கூடியது என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைராலஜி பிரிவின் தலைவி, விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஜானகி அபேநாயக்க தெரிவித்தார்.

இந்த நோயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள முகமூடி அணிவது மற்றும் கைகளைச் சுத்தம் செய்வது உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது முக்கியம் என்றும் அவர் கூறினார். (அ)

# மகிந்தவின் தலைமையில் பலமான அரசியல் கூட்டு!

## வெகுவிரைவில் ஸ்தாபிக்க பெரமுன திட்டம்

கொழும்பு, நவ. 05

2023 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மொட்டுச் சின்னத்தை முன்னிலைப் படுத்தி போட்டியிடுவோம். முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசியல் கூட்டணி வெகுவிரைவில் ஸ்தாபிக்கப்படும் என பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரி மன்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுன பல சவால்களை கடந்துள்ளது.அரசியல் ரீதியில் எடுக்கப்பட்ட ஒரு சில தீர்மானங்கள் நாட்டின் நலனை மையப்படுத்தியதாக காணப்பட்டாலும், அது சூழ்நிலைக்கு பொருத்தமற்றதாக அமைந்ததால் பல நெருக்கடிகளை எதிர்க்கொள்ள நேரிட்டது.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பிற்கமைய பொதுஜன பெரமுன மறுசீரமைக்கப்படும் அதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.பொதுஜன பெரமுன ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணியமைத்து எதிர்வரும் காலங்களில் போட்டியிட உள்ளதாக வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றதாகும்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு மக்களாணை கிடையாது என்பது அனைவரும் அறிந்ததே. ஆகவே மக்களாணை இல்லாத ஒரு கட்சியுடன் எவ்வாறு கூட்டணி அமைத்து போட்டியிடுவது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ளோம்.

ஐக்கிய தேசிய கட்சி தமக்கான மக்கள் செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கும்,ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது. பொதுஜன பெரமுனவுக்கு இன்றும் மக்கள் செல்வாக்கு உண்டு.

எதிர்வரும் ஆண்டு இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மொட்டுச் சின்னத்தை முன்னிலைப் படுத்த போட்டியிடுவோம் - என்றார். (அ)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
Passport அவசியமில்லை
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இன்னும் இரண்டு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
55'000 விசாக்கள் இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பு
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
V2 Travels and Tours Facebook
V2 Travels 0768226240 0768226244

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.